1492

தொகுதி 5.] 1926வது நவம்பர்மீ 1உ [பகுதி 10.

OFFICE OF THE REGISTRAR OF
20 DEC 1926

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

கொஞ்சம் இருள் கவிந்தது. அதைச் சட்டென்று மறைத்து விட்டு "நீ மிக்க அவசரக்காரன்" என்றான்.

ஆனந்த:—"இல்லை, அப்படியல்ல, இத்தகைய விஷயங்களை யறியவேண்டியது என் தொழிலின் கடமை" என்றான்.

சொக்கநாதன் தன் கலக்கத்தைச் சமாளித்துக் கொண்டு "அதைக்கூற எனக்குச் சற்றும் ஆக்ஷேபணையில்லை. ஞானரத்னம் குரு இருக்கிறாரே அவர்தான் எனக்குத் தந்தி கொடுத்தார். அதனால்தான் நான் வந்தேன்" என்றான்.

ஆனந்த:—மிக்க வந்தனம். இப்போது தாங்கள் முதலில் கேட்ட கேள்விக்கு நான் என்னால் கூடிய விடையளிக்கிறேன். அதனால் இவ்விஷயத்தைப்பற்றி என் மனம் இன்னும் தெளிவான நிலைக்கு வரவில்லை. ஆயினும் இதன் முடிவை யெப்படியும் அறிந்தே தீர்வேன் என்ற நம்பகம் இருக்கிறது. இப்போது இதற்குமேல் ஒன்றுஞ் சொல்வதற்கில்லை.

சொக்கநாதன்:—உனக்குக் குறிப்பாய் எத்திக்கிலேனும் சந்தேகம் உண்டானால் அதை யென்னிடம் கூற ஏதேனும் ஆக்ஷேபனை யுண்டோ?

ஆனந்த:—இக்கேள்விக்கு இப்போது நான் விடை யளிக்க முடியாது.

சொக்க:—"அப்படியாயின் நான் என் காலத்தை வியர்த்தமாய்ச் செலவழித்தேன். நான் இன்னும் இங்கிருக்க வேண்டியது அனாவசியம்" என்று கூறிவிட்டு மனச் சலிப்போடு எழுந்து வீட்டைவிட்டுச் சென்றான்.

சொக்கநாதன் சென்றதும் ஆனந்தலிங் ஆழ்ந்த சிந்தனையோடு சுமார் ஐந்து நிமிடங்கள் வரையில் உட்கார்ந்

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
20 DEC 1926

186509.

திருந்து அதன் பிறகு சட்டென்றெழுந்து வெளியிற் சென்றான். மாலை வரையில் ஆனந்தஸிங் திரும்பி வரவேயில்லை.

3-வது அத்தியாயம்.

மாலை ஐந்து மணிக்கு ஆனந்தஸிங் ஓய்ந்த நடையோடும் வாடிய முகத்தோடும் நிதானமாய் வீட்டிற்குள் வருவதைக்கண்ட விசுவநாதன் அவன் சென்றிருந்த காரியத்தில் அவ்வளவாக அனுகூல முண்டாகவில்லையென்று ஊகித்துக்கொண்டான். அவன் வருவதற்கு முன் அவன் பேருக்கு ஒரு தந்தி வந்திருந்தது. விசுவநாதன் அதை யவனிடம் கொடுத்ததும் ஆனந்தஸிங் அதை வாசித்துப்பார்த்துக் கிழித்துத் தீயில் எறிந்துவிட்டு விசுவநாதனை நோக்கி,

"நண்பனே! இது பாலூர் ஹோட்டலிலிருந்து வந்தது. அந்த ஹோட்டலின் விலாசத்தை ஞானரத்னம் குருவிடம் கேட்டறிந்து கொண்டேன். சொக்கநாதன் கூறியவை யாவும் உண்மைதானா வென்று அறியவேண்டுமென்பது என் நோக்கம். அவன் கடந்த இரவு அந்த ஹோட்டலில் தானிருந்திருக்கிறான். சில சாமான்களை மெய்யாகவே கப்பலில் ஏற்றிவிட்டிருக்கிறான். இந்த விஷயத்தின் ஆராய்ச்சியில் கலந்து கொள்வதற்காகவே இங்கு திரும்பி வந்திருக்கிறான். இதைப்பற்றி என்ன நினைக்கிறாய்?" என்றான்.

விசுவ:—அவன் இவ்விஷயத்தில் அதிக ஆவலுடையவனாக விருக்கிறான்.

ஆனந்த:—ஆம். அளவு கடந்த ஆவல் கொண்டிருக்கிறான். இவன் சம்பந்தமாய் எங்கோ ஒரு முடியிருக்கிறது. அது நமக்கு அகப்பட்டால் முழுமையும் அகப்பட்டு விடும். நண்பனே! நீ சோர்வடையாதே. உற்சாகமாக

வே யிரு. எப்படியும் சீக்கிரத்தில் இதைப்பற்றிய புது விஷயம் நமக்குக் கிடைக்கும். உடனே யாவும் அகப் பட்டுவிடும். இப்போது தோன்றும் இருள் போன்ற கஷ்டங்களெல்லாம் பனிபோல் மறைந்து போம்" என்றான்.

ஆனந்தஸிங் கூறியது போலவே விஷயங்கள் சம்பவித் தாலும், அத்தகைய சீக்கிரம், அவ்வளவு அபூர்வ மான விதமாகவும், இவர்கள் ஆராய்ச்சியை யடியோடு புது வழியில் திருப்பக்கூடிய விதமாகவும் நேரிடுமென்று விசுவ நாதன் கருதவேயில்லை.

மறுநாட் காலை ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் நித்தி ரைவிட் டெழுந்தார்கள். இன்னும் காலைப்போஜனம் எடுத் துக்கொள்ளவில்லை. விசுவநாதன் தன் அறையின் சாளரத் தில் நின்று தன் சிகையைச் சீவிக்கொண்டிருந்தான். அச் சமயம் அதி வேகமாக ஒரு குதிரைவண்டி வந்ததும் வீட் டெதிரில் தட்டென்று நின்றது. ஞானரத்னம் குரு அதி லிருந்திறங்கி மிக்க ஆத்திரத்தோடும் கலவரத்தோடும் உள்ளே யோடி வருவதைக்கண்டதே ஆனந்தஸிங் விசுவ நாதன் இருவரும் அவர் எதிரிலோடி அழைத்து வந்தார் கள்.

குருவின் முகத்தில் மிக்க பயங்காமான விகாரம் உண் டாகியிருந்தது. அவர் அவயவங்கள் படபடத்தன. அவர் "அய்யோ! ஆனந்தஸிங்! பேயே வந்துவிட்டது. ஆம் ஆம். என் கிராமத்தையே பேய் அழிக்கத் தீர்மானித்துவிட்டது பொய்யல்ல. அய்யோ! என்ன பயங்காம்" என்று வாய் குளறிக்கொண்டு நிற்கவும் முடியாமல் தள்ளாடிக்கொண் டிருந்தார். ஆனந்தஸிங் அவர் காங்களைப்பற்றி ஒரு நாற் காலியில் அவரை யுட்காரச்செய்து "சற்று பொறும், மன

தைத் தைரியப்படுத்தி மெதுவாய் நடந்த சங்கதி எதுவோ அதைக்கூறும்" என்று தேறுதல் கூறினன்.

அதன்மேல் குரு சற்று நிதானத்தோடு "அந்தோ! தங்கவேல் பிள்ளையும் இரவு இறந்துபோனன். அவன் சகோதரியைப் போலவே முகத்தில் அதே மாதிரி பயங்கரமான விகாரம்" என்ருர்.

குரு கூறியதைக் கேட்டதே ஆனந்தஸிங் துள்ளியெழுந்தான். அவன் கண்களில் மிக்க பிரகாசமுண்டாயிற்று. அவன் மனம் துடித்துக் குருவை நோக்கி ஆத்திரத்தோடு "உங்கள் வண்டியில் எங்கள் இருவர்க்கும் இடமிருக்கிறதா?" என்று கேட்டான். குரு "ஆகா; இருக்கிறது" என்றதே ஆனந்தஸிங் விசுவநாதனை நோக்கி "நண்பனே! நமது காலைப்போசனத்தைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். அங்கு ஒருவரும் வந்து அங்குள்ள நிலைமையைக் கலைக்காமுன்னம் நாம் செல்லவேண்டும். புறப்படு சீக்கிரம்" என்ருன்.

உடனே ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் குருவின் வண்டியிலேயே யேறிக்கொண்டு புறப்பட்டார்கள். ஆனந்தஸிங் வண்டியை யதிவேகமாக விடும்படி குருவை வற்புறுத்திஞன். ஆதலால் இவர்கள் அதிதுரிதமாக அங்கு போய்ச் சேர்ந்தார்கள்.

இவர்கள் அங்கு சேரும்போது டாக்டராவது போலீஸாராவது அங்கு வரவில்லை. அவ்வீட்டில் தங்கவேல் பிள்ளை வசிக்கும் இரண்டு அறைகளும் கீழும் மேலுமாய் இருக்கின்றன. மேலிருக்குமறைக்குப் படிகளிலேறிச் செல்லவேண்டும். அது சயன அறை. இரண்டறைகளிலுமுள்ள சாளரங்கள் எதிரிலுள்ள பூஞ்செடிகள் வைக்கப்பட்டிருந்த வெளிப் பிரதேசத்தை நோக்கியபடி யிருக்கின்றன.

இவர்கள் கீழிருக்கும் அறையில் நுழைந்ததும் அங்கு மிக்க புழுக்கமாக விருந்தது. முதலில் உள்ளே சென்ற வேலைக்காரன் அங்கிருந்த சாளரத்தைத் திறவாமலிருந்தால் இன்னும் சகிக்கொணுப் புழுக்கமாக விருந்திருக்குமெனத் தோன்றியது. அறையின் மத்தியிலிருந்த ஒரு மேஜைமேல் ஒரு எண்ணெய்த்தீபம் அணைந்து போய்ப் புகைந்துகொண் டிருந்தது.

மேஜையின் எதிரில் நாற்காலியில் தங்கவேல்பிள்ளை உட்கார்ந்தபடி இறந்துபோயிருக்கிறுன். நாற்காலியில் சாய்ந்தபடி யிருந்தான். அவன் தாடி மேலுக்கு கட்டுக் கொண்டிருந்தது. அவன் அணிந்திருந்த மூக்குக்கண் ணுடி நெற்றியின்மேல் ஏற்றப்பட்டிருந்தது. அவன் முகம் சாளரத்தைப் பார்த்தபடி யிருந்தது. அவன் சகோதரி யாகிய பங்கஜத்தின் முகம் எவ்வாறு மிக்க பயத்தால் வலி வந்ததுபோல் விகாரமடைந்திருந்ததோ அவ்வாறே யிவன் முகமும் மிக்க பயங்கரமான விகாரமடைந்திருந்தது. அவ னுடைய உருவங்களும் முக்கியமாய்க் கைவிரல்களும் சகிக் கொணுதபயத்தால் வலித்துக்கொண்டவைபோல் தோன் றின. அவன் பூர்ணமாக உடை யணிந்திருந்தான். ஆனுல் அவசரமாக அணிந்துகொண்டிருந்தான் என்று புலப்பட் டது. முன்னமே விசாரித்ததில் அவன் படுக்கையில் சய னித்துக்கொண் டிருந்தானென்று தெரிந்தபடியால் இக் கோரசம்பவம் பொழுதுவிடிந்தபின் நடந்திருக்க வேண்டு மென்றும் தெரிந்தது.

மேற்கண்ட விஷயங்களை நோக்கியதும் ஆனந்தலிங் முகத்தில் உண்டான அதி யாச்சரியமான தீக்ஷணியமும், அதன் தேகம் படபடத்ததும், அவன் நடந்துகொண்ட மிக்க சுறுசுறுப்பான மாதிரியும் காண்போர்க்கே அதியற்புதமாக விளங்கும். சாதாரணமாய் மற்ற எல்லாருடைய மனமும்

திகிலோடு ஸ்தம்பித்துவிடத்தக்க சந்தர்ப்பத்தில் ஆனந்த ஸிங்குக்கு அதி யாச்சரியமான சமயோசித யோசனையும் அதிதீட்சணியமான புத்தியும் வெளிவந்தன. ஒரு விநாடியில் அவன் ஒவ்வொரு நரம்பும் சுறு சுறுப்படைந்தது. அவன் கண்கள் கொள்ளிக்கட்டைகள்போல் ஜொலித்தன. அவன் படபடப்பாய் ஆனால் புத்திசாலித்தனத்தோடு தன் வேலையைச் செய்யத்தொடங்கினான். அச்சமயம் வேட்டை கட்டாயம் நம்கைக்குச் சிக்கும் என்று பூரணநம்பிக்கையுடையவொருவேட்டை நாய்போல் ஆய்விட்டான்.

சவம் இருக்கும் அறையை நாற்புறங்களிலும் உற்று நோக்கியதும் சாளரத்தில் பாய்ந்துபோய் வெளியிலுள்ள இடத்தை நோக்கினான். மறுபடி அறைக்குள் வந்து சுற்றிப்பார்த்தான். உடனே படிகளில் ஏறி மேலிருக்கும் படுக்கை யறைக்குச்சென்று அதை நன்றாய்ச்சோதித்துக் கடைசியில் அதன் சாளரத்தைத்திறந்து எட்டிப்பார்த்தான். உடனே மிக்க சந்தோஷத்தோடும் உற்சாகத்தோடும் இரண்டு மூன்று முறை சத்தமிட்டான்.

அதனால் அங்கு ஏதோ திருப்திகரமான உளவு அவனுக்கு அகப்பட்டிருக்க வேண்டுமென்று விசுவநாதன் தெரிந்துகொண்டான். அங்கு சாளரத்தில் எதையோ கண்டபின் மிக்க அவசரத்தோடு மறுபடி இறங்கிக் கீழிருக்குமறைக்குச்சென்று முன்போலவே சாளரத்தின் வழியாய் வெளியிற்சென்று அங்கு முழங்காற்படியிட்டுத் தரையைச் சற்றுநேரம் சோதித்தான். பிறகு உடனே மறுபடி எழுந்து கீழறைக்குள் நுழைந்து அறையின் நான்கு மூலைகளையும் நன்றாய்ப்பார்த்துவிட்டுக் கடைசியில் தீபத்தருகில் சென்று அதை யுன்னிப்பாய்ப் பார்த்தான். பூதக்கண்ணாடியைப் போட்டுக்கொண்டு அந்த தீபத்தை உன்னிப்பாய்ப் பார்த்தான். அது ஒரு சாதாரணதீபமே—ஆனந்தஸிங் அதன் உய

ரம், அதில் எண்ணெயூற்றியிருக்கும் கிண்ணம் யாவற்றையும் அளவெடுத்துக்கொண்டான். அத் தீபத்தின்மேல் ஒரு கிண்ணம் கவிழ்த்தது போல் மேல்மூடி யொன்றிருந்தது. ஆனந்தஸிங் அதில் படிந்திருந்த புகையின் சாம்பரைச் சுரண்டி யெடுத்துக்கொண்டு அத்தீபத்தின் ஓரத்தில் படிந்திருந்த ஏதோ தூள்போன்ற வஸ்துவையும் திரட்டி யெடுத்து மிக்க பத்திரமாய் ஒரு கடிதத்தில் வைத்து மடித்துத் தன் ஜேபியில் வைத்துக்கொண்டான்.

இவையாவும் முடிந்தபின் கடைசியில் டாக்டரும் போலீஸாரும் அருகில்வரும் சமயம் ஆனந்தஸிங் குருவையும் விசுவநாதனையும் இப்படி வாருங்கள் என்று அந்த விடத்தைவிட்டுத் தோட்டத்திற்குள் அழைத்துச் சென்றான். அங்கு சென்றதும் அவன் ஞானாத்தனம் குருவை நோக்கி, "குருவே! என் ஆராய்ச்சி பயனளிக்காமல் போகவில்லை என்று சந்தோஷமடைகிறேன்; நான் இங்கு தங்கியிருந்து போலீஸ்காரரோடு கலந்து விவகாரம் செய்ய அனுகூலப்படாது. ஆகையால் தாங்கள் தயவுசெய்து நான் கூறியதாக அவர்கள் கவனத்தை மேல்மாடியிலுள்ள சாளரத்தருகிலும் கீழ் அறையிலுள்ள தீபத்திலும் செலுத்தும்படி கூறுங்கள். இரண்டிலும் விசேஷமிருக்கிறது. இரண்டையும் சேர்த்துப்பார்த்தால் முடிவு கட்டாயம் தானே விளங்கிவிடும். என் வந்தனத்தைப் போலீஸாருக்குக் கூறும். அவர்களுக்கு இன்னும் ஏதேனும் தகவல் வேண்டுமாயின் என்னால் கூடியதை யறிவிக்க நான் ஆயத்தமாயிருக்கிறேன். அறியவேண்டுமாயின் என் குடிசைக்கு வரச்சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு விசுவநாதனை நோக்கி, "நண்பரே! இனி நாம் வேறிடத்தில் சென்று வேலைசெய்வது மிக்க நலம் என்று தோன்றுகிறது. புறப்படும் செல்வோம்" என்றான். சற்று நேரத்திற்குள் இருவரும் அங்கிருந்து புறப்பட்டுத் தங்

கள் வாசஸ்தலத்தை நோக்கிச் சென்றார்கள். ஆனந்தஸிங் வழக்கப்படி ஒன்றும் கூறாமல் ஆலோசனையோடு நடந்தான்.

போலீஸாரும் டாக்டரும் வந்து மாணம் சம்பவித்த இடத்தைச் சோதனை செய்தார்கள். இறந்துபோன தங்கவேல் பிள்ளையைத்தவிர அவ்வீட்டிலிருப்போர் ஞானரத்னம் குருவும் ஒரேயொருவேலையாளுமே. போலீஸார் யாரை விசாரித்தும் ஒரு சங்கதியும் அறிய முடியவில்லை. இராஜதானி நகரிலுள்ள போலீஸாருக்கு ஆனந்தஸிங்கின் சாமார்த்தியம் நன்றாய்த் தெரியும். நாட்டுப் போலீஸார் ஆனந்தஸிங்கைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்களேயன்றி வேறொன்றுமறியார்கள்.

மேலும் மனிதர்க்கு நான் என்ற அகங்காரமிருக்கிறதே அது மகாகொடியது-கொடியதினும் கொடியது. அது மனிதனை யடியோடழித்துவிடச் சக்தியுடையது. அந்த அகங்காரமுடையவன் ஒருபோதும் ஈடேறுவதில்லை. இதனால் இந்த நாட்டுப்புறப் போலீஸாருக்கு ஆனந்தஸிங் விஷயத்தில் முன்னமே பொறாமை. இப்போது ஞானரத்னம் குரு ஆனந்தஸிங் கூறிய சங்கதிகளைக்கூறியதே அவர்கள், "அடடா! இவன்றான் பெரிய துப்பறியும் சாமார்த்தியமுடையவன் போலும் - சாளரத்திலும் தீபத்திலும் விசேஷமிருக்கிறதாம். பேஷ். இவன் நம்மை முட்டாள்களாகவே எண்ணி இதைக்கூறிவிட்டுப் போய்விட்டான். நாம் அவ்வளவு மூடர்களல்ல" என்று அடியோடு தவறான அபிப்பிராயம் கொண்டார்கள். அதோடு சாளரத்திலும் தீபத்திலும் என்னவிதவிசேஷமிருக்கும் என்பது அவர்கள் புத்திக்கு எட்டவேயில்லை. ஆகையால் அவர்கள் ஆனந்தஸிங் கூறிய விஷயங்களை யடியோடு விட்டுவிட்டுத் தங்கள் புத்திக்குத் தோன்றியபடி நடக்கத் தொடங்கினார்கள்.

டாக்டர் நெடுநேரம் சவத்தை யாராய்ச்சிசெய்து

பார்த்தார். முடிவில் இம்மாணம் புது மாளிகையில் நேர்ந்த இவர் சகோதரியின் மரணத்தைப்போல் ஏதோ அபூர்வமான பீதியால் நேரிட்டதாக மட்டும் தெரிகிறதேயன்றி வேறொன்றும் புலப்படவில்லை யென்று கூறிவிட்டார்.

போலீஸாரிடமிருந்து இரண்டு நாள் வரையில் ஒரு சங்கதியும் ஆனந்தலிங்குக்கு வரவேயில்லை. இதற்கிடையில் ஆனந்தலிங் வீட்டில் உட்கார்ந்து சிந்தனை செய்வதும் சுங்கானைப் பிடித்துக்கொண் டிருப்பதுமாயிருந்தான். ஆனால் நெடுநேரம் வெளியில் எங்கோ சென்று வந்துகொண் டிருந்தான். அவன் எங்குசென்று வந்தான் என்று விசுவநாதனுக்குப் புலப்படவில்லை. கடைசியில் ஆனந்தலிங் செய்த ஒரு சோதனையால் அவன் ஆராய்ச்சி எவ்வழியில் செல்கிறது என்று விசுவநாதனுக்குத் தெரியவந்தது. அதாவது ஆனந்தலிங் தங்கவேல் இறந்திருந்த அறையில் எரிந்து கொண்டிருந்த தீபத்தைப்போலவே அதே யளவுடைய இன்னொரு தீபம் வாங்கிவந்து அத்தீபத்தில் விட்டிருந்த அதேவித எண்ணெயை விட்டு ஏற்றி அது எந்நேரம் எரிகிறதென்று கண்டறிந்தான். அவன் இன்னொரு ஆராய்ச்சி செய்தான். அது மிக்க பயங்கரமும் ஆபத்துமானது. அதை யடியிற்கூறுகிறோம்:

அவன் விசுவநாதனை நோக்கி, "நண்பனே! நாம் கேள்விப்பட்டவைகளில் இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஒரே மாதிரியாய்த் தோன்றும் ஒரு விஷயத்தை நீ கவனித்தாயா? அதாவது புதுமாளிகையில் அக்கோரச்சம்பவம் நடந்த அறைக்குள்ளும், தங்கவேலின் அறைக்குள்ளும் புலப்பட்ட ஒருவிதமான புழுக்கமும் நெடியுடையதுமான வாயுவைப்பற்றிக் கூறப்பட்டது கவனமிருக்கிறதா? தங்கவேல்தான் கடைசியாகத் தன் சகோதரர்களும் சகோதரியும் இருந்த அறைக்குள் டாக்டர் கூடச் சென்றபோது அந்த

டாக்டர் ஒருவித மூர்ச்சையடைந்து நாற்காலியில் சாய்ந்து விட்டார் என்று கூறினனே, அது கவனமிருக்கிறதா? இன்னென்று; பொன்னுச்சி அந்த அறைக்குள் சென்றபோது முதலில் மூர்ச்சையடைந்து பிறகே சாளரத்தைத் திறந்ததாய்க்கூறினுள்.

இரண்டாவது தங்கவேல் மடிந்திருந்த அறைக்குள் நாம் நுழைந்தபோது சற்று முன்புதான் சாளரம் திறக்கப்பட்டிருப்பினும் நமக்கு அந்த அறையிலிருந்த காற்று எவ்வாறு புலப்பட்டதென்பது நன்ருகக் கவனமிருக்கிறதல்லவா? அந்தச்சாளரத்தைத்திறந்த வேலைக்காரியை நான் விசாரித்தபோது அவள்உடனே அசௌக்கியமடைந்து போய்ப் படுத்துக்கொண்டாளென்று தெரிந்தது. இப்போது இவற்ருல் விஷயம் விளங்குகிறதென்று தெரிகிறதல்லவா. இந்த இரண்டு விவகாரங்களிலும் பாஷாணப்புகை, வேலை செய்திருக்கிறதென்று நன்ருய்த் தெரிகிறதல்லவா? இரண்டிலும் தீச்சம்பந்தமிருக்கிறது. ஒன்றில் நெகிடித்தீ; மற்றென்றில் தீபம். நெகிடித்தீ முன்பேயெரிந்துகொண்டிருந்தது. தீபமோ நாம் செய்த சோதனையால் பொழுது விடிந்த பின் ஏற்றப்பட்டதென்று தெரிகிறது. உண்மையில் இம் மூன்றிலும் ஒரே சம்பந்தமிருக்கிறது-தீ, புகை, மரணம் அல்லது பைத்தியம்-இதுநன்ருய்த் தெளிவாய்த் தெரிகிறது" என்ருன்.

விசுவ:—ஆம்; அப்படித்தான் தோன்றுகிறது.

ஆனந்த:—இதையே நாம் அஸ்திவாரமாக வைத்துக் கொண்டு மேலே செல்வோம். இரண்டு சம்பவங்களிலும் தீயில் ஏதோ ஒரு வஸ்து போடப்பட்டது. அது விஷப்புகையை யுண்டாக்கி மரணத்தையும் பயித்தியத்தையும் உண்டாகச் செய்திருக்கிறது-முதல் சம்பவத்தில் புது மாளிகையில் அந்த வஸ்து நெகிடித்தீயில்

போடப்பட்டிருக்கிறது. அங்கு சாளரம் மூடப்பட்டிருந்ததால் புகையில் பெரும்பாகம் புகைப்போக்கியில் வெளி சென்றுவிடும். ஆகையால் விஷப்புகையின் பலம் குறைந்துவிட்டது. இரண்டாவது சம்பவத்தில் சாளரம் மூடப்பட்டிருந்ததோடு புகைப்போக்கியில்லே. அதோடு அந்த வஸ்து தீபத்தில் போடப்பட்டது. ஆகையால் புகை வெளியிற்செல்ல ஒரு வழியுமில்லே. நடந்த விவகாரமும் இதை நிரூபிக்கிறது. ஆகையினுல் இரண்டாவது இடத்தைவிட முதலாவதிடத்தில் பாஷாணப் புகையின் பலம் குறைந்து இருந்தது. நடந்த காரியமும் இதை நிரூபிக்கிறது. எவ்வாறெனில் அம்மாது பலங் குறைந்தவளானதால் இறந்தே போய்விட்டாள். ஆடவரிருவரும் பலசாலிகள் ஆதலின் புத்தி கெட்டதோடு தப்பினுர்கள். அப்பாஷாணத்தின் முதல் வேலே புத்தியை யழிப்பதென்று தெரிகிறது. இரண்டாவதிடத்தில் பூரணமாய் வேலே செய்துவிட்டது. புகைவதால் மனிதரைக் கொல்லத் தக்க ஏதோ ஒரு பாஷாணமே இவ்விவகாரங்களுக்கெல்லாம் காரணம் என்று நிச்சயமாய்த் தெரிந்துவிட்டது.

இக்காரணங்களெல்லாம் என் மனதிற்குப் புலப்பட்டதால் தங்கவேலின் அறையில் அப்பாஷாணம் கொஞ்சமேனும் மிச்சமாயிருக்குமென்று உத்தேசித்துச் சோதித்தேன். அது தீபத்தின் மேல் தட்டில் அல்லது புகைபடுமிடத்தில் தான் விசேஷமாய் இருக்கவேண்டும். அவ்வாறே பார்த்தபோது மேலேயிருந்த தட்டில் மினுமினென்ற ஒரு விதப் புகை சாம்பல் போல் பட்டிருந்தது. அதன் ஓரங்களில் சற்று சிகப்பு நிறமுடைய சூரணம் போன்ற தூள் இருந்தது. தீபத்தின் ஓரங்களிலிருந்தவையும் இன்

னம் பற்றவில்லை. நான் அவற்றில் பாதியெடுத்துக் கடிதத்தில் மடித்து வைத்துக்கொண்டேன். நீயும் பார்த்துக் கொண்டிருந்தாயல்லவா?" என்றான்.

விசுவநாதன் சற்று வியப்போடு "என்ன? பாதியெடுத்துக்கொண்டாயா? ஏன் பாதி மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும். முழுமையு மெடுத்துவந்தாலென்ன?" என்றான்.

ஆனந்தஸிங் "நான் ஒருபோதும் போலீஸாருக்கு இடைஞ்சல் உண்டாகச் செய்வதில்லை. புத்திசாலிகளாயின் அவர்கள் அதைப்பார்த்து உண்மையைக்கண்டு பிடிக்கட்டும் என்றே பாதி விட்டுவைத்தேன்" என்றான்.

4-வது அத்தியாயம்.

ஆனந்தஸிங்கினுடைய பெருந் தன்மையான குணத்தைக் கேட்ட விசுவநாதன் மிக்க சந்தோஷமும் வியப்புமடைந்தான். ஆனந்தஸிங்,குற்றம் நடந்த இடத்திற்குச் சென்று ஆராய்ச்சி செய்கையில் தனக்குச் சரியான உளவுகள் அகப்படின் அவற்றை யழிக்காமல் அப்படியே விட்டுவிட்டு வருவது எப்போதுமே வழக்கம். அப்படியே அங்கும் விட்டு வந்தான். அதைக் கூறிய பின் ஆனந்தஸிங் விசுவநாதனை நோக்கி,

"நண்பனே! இனி இன்னொரு ஆராய்ச்சியையும் செய்து முடிப்போம். மேஜைமேல் தீபத்தை யெடுத்துவை. ஆயினும் நம்மால் கூடியவரையில் பூரண எச்சரிக்கையெடுத்துக் கொள்வோம். நீ வேண்டுமாயின் வெளியில் போய்விடு. நான் மட்டுமே பார்க்கிறேன். இப்பாஷாணத்தாலுண்டாகும் புகை கொல்வது ஒரு பக்க மிருக்கட்டும். ஆள்

மடியத்தக்க அத்தகைய பயத்தையுண்டாக்க இதில் என்ன இருக்கிறது? எப்படி யிது வேலை செய்கிறது? என்று அறிய வேண்டு மென்பதே என் எண்ணம்" என்றான்.

விசுவநாதன் "நாட்டிற்கே எவ்வளவோ உபகாரம் செய்யும் பேருபகாரியாகிய உன் உயிரைவிடவா என் உயிர் அவ்வளவு உயர்ந்தது?" என்றான்.

ஆனந்தஸிங் "ஆ! அப்படியா சங்கதி. நீ அவ்வாறு தான் கூறுவாயென்று எனக்கு முன்னமே தெரியும். சாளரத்தைத் திறந்து விட்டு அதன் அருகிலிருக்கும் பெரிய நாற்காலியில் நீயுட்கார். நான் நேராய் உனக்கு எதிரில் உட்காருகிறேன். இருவரும் தீபத்திற்குச் சமதூரத்தி லிருப்போம். ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டே யிருக்கவேண்டும். நான் உன் முகத்திலும் நீ என் முகத்திலும் உண்டாகும் மாறுதல்களைக் கவனிக்க வேண்டும். குறிகள் சற்று அபாயகரமான நிலைமைக்கு மாறுவதாயின் தட்சணம் நிறுத்திவிடவேண்டும். இருவரும் மிக்க ஜாக்கிரதையாகவும் எச்சரிக்கையாகவும் இருப்போம். இனி தீபத்தையேற்று. ஆ சரி. இதோ அந்தப் பாஷாணம். இதைப் போடுகிறேன். தீர்ந்தது இனி என்ன நடக்கிறது கவனிப்போம்" என்றான்.

இருவரும் உட்கார்ந்து கவனித்தார்கள். அவர்கள் நெடுநேரம் காத்திருக்கவேண்டிய அவசிய மேதுமில்லை. உடனே தீபத்தினின்றும் கொண்டல் கொண்டலாய்ப் புகை கிளம்பியதும் ஒருவித நெடியுண்டானது போல் புலப்பட்டது. ஒரு விநாடிக்குள் அவர்கள் யோசனையவர்கள் சுயாதீனத்தை விட்டு மீறி விட்டது. புத்தியும் கலங்கத் தொடங்கியது. வெளியில் மேகம் கவிந்து வருவது போலவும் அதிலிருந்து சில உருவங்கள் எட்டிப்பார்ப்பது போலவும் தோன்றியது. காட்சிகள் படபட வென்று மாறிக்

கொண்டே போயின. எங்கும் பெரு வெளியாகவும் மேகம் நிறைந்திருப்பது போலும் அதிலிருந்து எப்போதும் கேட்டும் பார்த்துமிராதவையும் யூகைக்கு எட்டாதவையுமான பயங்கர உருவங்கள் எண்ணிக்கையற்றன பாய்ந்து வருவது போலவும் பெரிய பெரிய ஈட்டிகளால் குத்த வருவது போலவும் பயமுறுத்துவது போலவும் இருந்தது. அவர்கள் மனதில் பெரும் பயம் பிடித்துக் கொண்டது. விசுவநாதன் கூச்சலிட முயன்றான். நாவையசைக்கவே முடியவில்லை. அவனுக்குத் தன் கண்கள் பிதுங்குவது போலும் நெஞ்சடைப்பது போலும் தோன்றியது. அச்சமயம் அவன் தன் பலம் முழுமையும் செலுத்தி நடந்த விஷயத்தை நினைவிற்குக் கொண்டுவர முயன்றான். மிகக் கஷ்டத்தோடு ஆனந்தஸிங்கின் முகத்தை நோக்கினான்.

அச்சமயம் ஆனந்தஸிங்கின் முகத்தில் மிக்க பயங்கரமான விகாரம் உண்டாயிருந்தது. அவன் கண்கள் விழித்தபடியிருந்தன. அப்பயங்கர காட்சியே விசுவநாதனைத் திடுக்கிடச் செய்து எள்ளளவு புத்தி சுயாதீனத்தை யளித்தது. அச்சமயம் அவன் உடனே சமாளித்திராவிட்டால் மோசமாகவே முடிந்திருக்கும். ஆனவரையில் விசுவநாதன் உடனே எழுந்து தள்ளாடிக் கொண்டு போய் ஆனந்தஸிங்கைத் தாவிப்பற்றினான். ஆனந்தஸிங்கும் தட்டென்றெழுந்திருக்க இருவரும் ஒருவரை யொருவர் தழுவியபடி அறையிலிருந்து வெளிப்பட்டு மைதானத்தில் வந்து புல் தரைமேல் சாய்ந்தார்கள்.

நல்ல காற்று படப்பட மெதுவாய் ஒரு பயங்காமான கனவிலிருந்து விழித்தவர்கள் போல் அவர்களுக்குக் கொஞ்சங் கொஞ்சமாய்ப் புத்தி விளங்கத் தொடங்கியது. பிறகு சற்று நேரங்கழித்த பிறகே நடந்த விஷயம் இன்னதென்றும் தாங்கள் செய்த துணிகாமான ஆராய்ச்சி எத்தகைய

தென்றும் புத்தியில் விளங்கியது. உடனே பீதியோடு ஒருவர் முகத்தை யொருவர் நோக்கினார்கள்.

ஆனந்தஸிங் திடுக்கிட்டவன் போல் "ஓ என் அருமை நண்பனே! நான் செய்தது பெருந் தவறான காரியம். பெரிய முட்டாள் தனம் செய்து விட்டேன். உன்னை யதில் சேர்த்தே யிருக்கலாகாது. உண்மையில் இப்பாஷாணம் இத்தகைய விபரீதங்களை யுண்டாக்கு மென்றும் இதில் சிக்கியவர்கள் மறுபடி சமாளிப்பது அசாத்தியமென்றும் எனக்குப் புலப்படவில்லை. கொஞ்சம் தெரிந்திருந்தால் நான் உன்னைச் சேர்த்தே இருக்கமாட்டேன். இவ்வாறு முட்டாள் தனமாகச் செய்து விட்டதற்கு உண்மையாகவே மிக்க விசனிக்கிறேன். நினைக்கும் போதே நடுக்கமாக விருக்கிறது" என்றான்.

ஆனந்தஸிங்குக்குத் தன்மேல் எத்தகைய அன்பிருக்கிறதென்பது விசுவநாதனுக்கு அப்போது தான் புலப்பட்டது. அவன் மனம் கரைந்து விட்டது. அவன் ஆனந்தஸிங்கைப் பற்றிக் கொண்டு "நண்பனே! இத்தகைய நண்பன் ஒரு ஆபத்தில் நுழையும் போது நான் மட்டும் இடைந்து நிற்பதென்றால் அப்போது நான் உனக்குத் தகுதி யற்ற சினேகிதனாக வல்லவோ இருக்கவேண்டும். என் உயிர் உன் உயிரினும் சிறந்ததா! சே சே! இத்தகைய சமயத்தில் உன்னோடு கூட ஆபத்தில் நுழைந்ததே என் மனதிற்கு எவ்வளவோ சந்தோஷத்தை யுண்டாக்குகிறது" என்றான்.

ஆனந்தஸிங் "ஆகா; நமக்குப் பயித்தியம் பிடித்து விட்டால் மிக்க வேடிக்கையாயிருக்கும். ஆனால் நாம் இத்தகைய ஆபத்தான ஆராய்ச்சியில் பிரவேசித்ததை யறிந்த எவனும் இதற்கு முன்பே நமக்குப் பைத்தியம் பிடித்திருந்தால்தான் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யத் துணிந்தோமென்றே கருதுவான்" என்று கூறிவிட்டு எழுந்து அறைக்

குச் சென்று அங்கிருந்த தீபத்தை யெடுத்துக் காத்தை நீட்டி எட்டப் பிடித்துக்கொண்டே வெளியில் வந்து அதை வீசி யெறிந்து விட்டு "விசுவநாதம்! இப்போது இவ்விஷயத்தில் எள்ளளவும் சந்தேகமில்லை யல்லவா?" என்றான்.

விசுவநாதன்:—"ஒரு சந்தேகமுமேயில்லை." என்றான்.

ஆனந்தஸிங்:—"ஆயினும் இதற்குக் காரணகர்த்தா யாரென்பது இன்னும் விளங்கவில்லை யல்லவா. இந்தப் பந்தலுக்குள் வா. இங்கு உட்கார்ந்து ஆலோசிப்போம். அறையைச் சற்று நேரம் திறந்தபடி விட்டிருந்தால் தான் சுத்தியாகும்." என்றான்.

இருவரும் பந்தலுக்குள் சென்று உட்கார்ந்தபின் ஆனந்தஸிங் விசுவநாதனை நோக்கி "நண்பனே! அக்கொடிய புகை யின்னும் என் தொண்டையில் இருப்பது போலவே தோன்றுகிறது. இருக்கிற அத்தாட்சிகளெல்லாம் இத் துஷ்டப் பயலாகிய தங்கவேல் பிள்ளையே இக்கோர ஸம்பவங்களுக்குக் காரணம் என்று காட்டுகின்றனவென்பதை யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டியதே. முதல் விஷயத்தில் அதற்குக் காரணம் இவனாயிருந்தான். ஆனால் இரண்டாவது விஷயத்தில் இவனே மடிந்தான். அதை யப்புறம் கவனிக்கும்போது, முதலில் அங்கு வெளியில் செடிகளின் பின் யாரோ நடமாடுவதுபோல் தோன்றியது என்றகதையைக் கட்டியவன் இவனே. அந்த இரவு மழையோடு மேகம் கரேலென் றிருந்தது. எங்கும் காரிருள் சூழ்ந்திருந்தது. அத்தகைய இருட்டில் சாளரத்திற்கப்பால் இரண்டடி தூரத்திலிருப்பது என்னவென்று தெரியாதே. அவ்வளவு தூரத்திலிருக்கும் செடிகள் இவனுக்கெப்படித் தெரிந்தன. அது நம்மை யேமாற்றி நமக்குத் தவறான வழிகாட்டவேண்டு மென்றே அக்கதையைக் கட்டிவிட்டான். இரண்டாவது விஷயம் முன்பு இவர்களுக்குள் பணம்

பங்கிட்டுக் கொண்டபோது சச்சரவு நேர்ந்ததென்றும் பிறகு சமாதானமாய் விட்டோமென்றும் கூறினன்.

அச்சச்சரவு எவ்வளவு கடுமையானதோ, சமாதானம் எவ்வளவு அற்பமானதோ நமக்கெப்படித் தெரியும். இவனுடைய முகத்தையும் கண்பார்வையையும் மற்ற குறிகளையும் நோக்கும்போது இவன் கொஞ்சமாவது தாராள குணமுள்ளவனென்றும் ஒருவர் செய்த குற்றத்தைமறக்கும் அல்லது மன்னிக்கும் குணமுள்ளவனென்றும் எள்ளளவாவது புலப்படவில்லை. இவன் அங்கிருந்து திரும்பிய உடனே அச்சம்பவம் நடந்திருக்கிறது. அப்பாஷாணத்தூளை இவன் நெருப்பில் போடாதிருந்தால் வேறுயார் போட்டவர்கள்? அங்கு வேறு யாரேனும் அன்னியர் வந்திருந்தால் அங்கிருந்தவர் தங்கள் ஆட்டத்தினின்றும் கலைந்து விட்டிருப்பார்கள். அதோடு இந்தப் பிரதேசத்தில் இரவு பத்து மணிக்குமேல் ஒருவரும் வீட்டைவிட்டு இன்னொருவர் வீட்டிற்குச் செல்லமாட்டார்கள். ஆகையால் எல்லா அத்தாட்சிகளும் இவனே குற்றவாளி யென்று காட்டுகின்றன என்பதை உண்மை யென்றே நாம் கருதவேண்டும்" என்றான்.

விசுவ:—"அப்படியாயின் இவன் இறந்தது தற்கொலை யென்று கருதலாமோ?" என்றான்.

ஆனந்த:—"நடந்த விவகாரங்களை நோக்கி நீ கூறும் விஷயம் சம்பவிக்கக்கூடாத தல்லவென்றே கருதலாம். ஏனெனில் இத்துஷ்டன் தன் சொந்தச் சகோதர சகோதரிகளுக்கு இத்தகைய பயங்கரமான ஆபத்தை யுண்டாக்கினன். ஸ்திரீ ஹத்தி யிவன் மனதைப்பற்றிக் கொண்டு வேதனை செய்யத் தொடங்கியது. இவன் அதைச் சகிக்க முடியாமல் தற்கொலை புரிந்துகொண்

டான் என்றே கருதலாகும். ஆனால் அதற்கு விரோத மாகச் சரியான சில அத்தாட்சிகளிருக்கின்றன. நல்ல அதிஷ்டமாய் இக்குடும்ப விஷயங்கள் யாவுமறிந்த ஒரே மனிதன் இங்கிருக்கிறான். அவன் யாவற்றையும் வெளியிடலாகும். இன்று பிற்பகலே அவன் வாயி னின்றே யாவற்றையும் அறிந்துகொள்வதற்கு அவ சியமான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன்" என்றான்.

அச்சமயம் சமீபத்தில் யாரோ ஆள் வரும் சத்தம் கேட்டதும் ஆனந்தஸிங் நிமிர்ந்து பார்த்து "ஆ! அந்த ஆள் சற்று முன்னாடியே வந்துவிட்டான்" என்று கூறிவிட்டு "ஆ டாக்டர் சொக்கநாதரே! இப்படி வாரும்; நாங்கள் அறையில் கொஞ்சம் இரசாயன ஆராய்ச்சி செய்துகொண் டிருந்தோம். ஆதலின் இச்சமயம் அங்கு இருக்க உதவாது" என்றான்.

மறு விநாடி அப்பிரம்மாண்டமான மனிதன் பந்தலுக் குள் வந்து உட்கார்ந்து அதை வியப்போடு நோக்கிவிட்டு "ஆனந்தஸிங்! நீ என்னை வரும்படி கோரினாய். உன் கடிதம் ஒருமணி நேரத்திற்கு முன்பு தான் வந்தது. நான் உன் கோரிக்கைப்படி ஏன் நடந்துகொள்ள வேண்டுமென்பது விளங்கவில்லை. ஆயினும் இதோ வந்துவிட்டேன்" என் றான்.

ஆனந்த:—"அதைப்பற்றிச் சுலபமாய் விளக்கிக் காட்டிவிட லாம். இப்போது நீர் தயவு வைத்துவந்ததற்காக நான் வந்தனமளிக்கிறேன். நான் தங்களை இந்த மைதானத்தில் இப்பந்தலின் கீழ் வரவேற்றதற்காக மன்னிக்கவேண்டும். காரணம் என்னவெனில் பத்தி ரிகையில் வெளியான பயங்கர சம்பவத்தைப்பற்றி இன்னொரு அத்தியாயத்தை யிப்போது தான் நானும் எனது நண்பரும் சேர்த்தோம். அக்காரணத்தால்

தற்சமயம் பரிசுத்தமான வாயுவுள்ள விடத்தில் இருப்பது தான் நலம். மேலும் நாம் இங்கு சம்பாஷிக்க வேண்டுமென்பதற்கு இன்னொரு காரணமுண்டு. அதாவது இப்போது நாம் விவகரிக்கப்போகிற விஷயம் தங்களை மிக நெருக்கமாய் பாதிக்கத்தக்கதாக விருப்பதால் மறைவிலிருந்து யாரேனும் உற்றுக்கேட்பதற்கு அனுகூலமில்லாத விடத்திலேயே யதைப் பற்றிப் பேசுவது நலமென்று தோன்றுகிறது" என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட சொக்கநாதன் வியப்படைந்தவன்போல் "என்ன அய்யா! உமது அர்த்தம்? எனக்கு நெருக்கமானதா? நெருக்கமாய் என்னைப் பாதிக்கத்தக்க விவகாரம் நீர் என்ன பேசப்போகிறீர்? எதைப்பற்றி?" என்றான்.

ஆனந்தஸிங் "எதைப்பற்றியா? ஆகா கூறுகிறேன். தங்கவேல் பிள்ளையைக் கொன்றதைப்பற்றியே" என்றான்.

அதைக்கேட்ட அம்முரட்டு மனிதனுடைய தோற்றத்தில் உண்டான பயங்காமான மாறுதலைக் கண்டதே விசுவநாதன் "அடடா! நாம் துப்பாக்கியைக் கையிலேயே வைத்துக்கொண்டிராமற் போய்விட்டோமே" என்று கருதினான். ஏனெனில் சொக்கநாதன் முகம் இரத்தம்போல் சிவந்துவிட்டது. அவன் கண்களில் அக்கினிச்சுவாலை போல் கோபத்தணல் வீசியது. அவன் நரம்புகள் மேலெழும்பின. அவன் தன் காங்களை முஷ்டி பிடித்துக்கொண்டு ஆனந்தஸிங்கின்மேல் பாயப்போகிறவன் போல் இரண்டடி முன் சென்றவன் அவன் முகத்தை நோக்கியதும் கஷ்டத்தோடு சமாளித்துத் தட்டென்று நின்றான். ஆனந்தஸிங் முகத்தில் தனக்குப் பூரண வல்லமையிருக்கிறதென்ற நம்பிக்கையால் ஒருவிதமான தைரியமும் சாந்தமும் தோன்றின.

சொக்கநாதன் அவனை நோக்கி "ஆனந்தஸிங்! நான் நெடுங்காலமாய்க் காடுகளில் சட்டத்திற்குப்புறமான இடங்களில் காட்டுமிராண்டிகளோடு சகவாசம்செய்து கொண்டிருந்ததால் சட்டத்தைச் சட்டையே செய்யாமல் நடந்து கொள்ளும் வழக்கமுடையவனாகி விட்டேன். நீ யதை மட்டும் மறக்கவேண்டாமென்று கூறுகிறேன். உனக்குக் கெடுதி செய்யவேண்டுமென்று எனக்கு விருப்பமில்லை" என்றான்.

ஆனந்தஸிங் "எனக்கு உனக்குத் தீங்கு செய்ய வேண்டுமென்ற எண்ணமில்லை. அதற்குத் தக்க ஒரே திருட்டாந்தம் கூறுகிறேன். அதாவது இப்போது எனக்குத் தெரிந்திருக்கும் விவகாரங்களுக்கு நான் இவற்றைப் போலீஸாருக்கு அறிவித்து விடாமல் உம்மையே நேரில் வாவழைத்ததே நான் உமக்குத் தீங்கு செய்ய விரும்பவில்லை யென்பதற்குப் போதிய சான்றாகும்" என்றான்.

சிங்க வேட்டையாடும் அம் மூரட்டு மனிதனாகிய சொக்கநாதன் ஆனந்தஸிங்கின் முகத்தில் தோன்றிய நிம்மதியான தைரியத்தைக் கண்டதே பீதி யடைந்துவிட்டான். அவன் பெருமூச்சு விட்டுக்கொண்டே உட்கார்ந்து, "உன் சங்கதிதானென்ன? நீ வீணாக என்னை மிரட்டுவதாயின் நான் அவ்விஷயத்தில் கெட்ட மனிதனாக விருப்பேன். வீண் கதைகள் வேண்டாம். நோய்ச் சங்கதி யென்ன என்பதைக் கூறு" என்றான்.

ஆனந்த:—"நான் இதைப்பற்றி யுன்னைக் கேட்பதன் காரணம் என்னவெனில் நான் மனம் விட்டுப்பேசினால் நீயும் மனம் விட்டு உண்மையைக் கூறுவாய் என்ற நம்பிக்கையாலேயே. இப்போது நமது சம்பாஷணையின் முடிவில் நான் எப்படி நடந்து கொள்வேனென்பது நீ உன் தற்காப்பைப்பற்றி எவ்வளவு உண்மை

யாகக் கூறுகிருயோ அதைப் பொறுத்ததாக விருக்கிறது" என்ருன்.

சொக்க:—என் தற்காப்பா?

ஆனந்த:—ஆம் அய்யா! உமது தற்காப்பிற்காகவே.

சொக்க:—எதைப்பற்றி நான் தற்காப்பு எடுத்துக்கொள்ள வேண்டும்?

ஆனந்த:—நீர் தங்கவேல் பிள்ளையைக் கொன்றீர் என்ற குற்றச்சாட்டிற்காக.

சொக்கநாதன் தன் நெற்றியைத் தடவிக்கொண்டு "ஆனந்தஸிங்! உண்மையாகவே நீ அளவு மீறிப்போகிருய். அடடா! நீ பிரக்யாதி பெற்ற ஜெயமனைத்தும் இப்படி ஆளை யேமாற்றி உடான் விடுவதால் தான் அடைந்தாயோ?

ஆனந்த:—பொறு அய்யா பொறு. இத்தகைய ஆசாமிகள் அனேகரை நான் பார்த்தும் பிடித்துமிருக்கிறேன். இது உடானு? இதுவா உடான்? உடானும் புறட்டும் உன்னிடமேயிருக்கின்றன. இப்போதும் உனக்குக் கெடுதி செய்யலாகாதென்றும், ஏனெனில் நீ செய்த வேலைக்கு ஏதோ தக்க காரணமிருக்கிறதென்றும் கருதியே விவகாரத்தை இந்த வழியில் நடத்துகிறேன். எனக்கு எவ்வளவு சங்கதி தெரிகிறதென்பதைப்பற்றி இனிக் கூறினுல்தான் உமது உடான் ஒழியும்.

"நீ பாலூர் துறைமுகத்திற்குச் சென்று கப்பலில் சில சாமான்களை யேற்றிவிட்டது உண்மையே. அவற்ருல் இதில் சம்பந்தப்பட்ட ஆசாமிகளில் நீ ஒருவன் என்பது மட்டுமே நான் எண்ணிக்கொண்டது" என்ருன்.

சொக்க:—நான் திரும்பி இங்கு வந்துவிட்டேன்.

ஆனந்த:—ஆம் ஆம். அந்தச்சங்கதி யாவும் கேட்டேன். அவற்ருல் ஒன்றும் விளங்கவில்லை. நமது விஷயத்திற்கு அவை சம்பந்தப்பட்டவையல்ல. ஆகையால்

அவற்றைத் தள்ளிவிடுவோம். நீ இங்கு என்னிடம் வந்து எனக்கு யார்மேல் சந்தேகம் என்று கேட்டாய். நான் அதைக்கூற மறுத்துவிட்டேன். அதன் பிறகு நீ என் வீட்டிலிருந்து நேராய் ஞானரத்னம் குருவின் வீட்டிற்குச் சென்றாய். சென்றவன் உள்ளே செல்லாமல் சற்றுநேரம் வெளியிலேயே நின்றிருந்து பிறகு நேராக உன் வாசஸ்தலத்திற்குச் சென்றாய். கடுகடுத்த முகத்தோடு அங்கிருந்து புறப்பட்டாய்.

சொக்க:—உனக்கு அச்சங்கதி எப்படித் தெரியும்?

ஆனந்த:—நான் உன்பின்னால் தொடர்ந்துவந்தேன்.

சொக்க:—நான் திரும்பித்திரும்பிப் பார்த்தேன், ஒருவரையும் காணவில்லையே.

ஆனந்த:—"நான் ஒருவரைப் பின்பற்றிச் செல்வதாயின் அவர்களுக்கு அப்படித்தான் புலப்படும். இருக்கட்டும். நீ யுன் அறையில்போய்ச் சேர்ந்தாய். இரவு முழுமையும் நீ நிம்மதியில்லாமல் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாய். அச்சமயம் ஒருவிதமான ஆலோசனை செய்தாய். விடியற்காலத்தில் அந்த ஏற்பாட்டின்படி காரியத்தை நடத்தத் தீர்மானித்து, பொழுதுவிடியும் சமயத்தில் உன் வீட்டைவிட்டுப் புறப்பட்டாய். உன் வீட்டெதிரில் ஒருவித சிகப்பு மண்குவியல் இருந்தது. அது பாதை செப்பனிட அங்கு குவிக்கப்பட்டிருந்தது. அது சிறுகற்கள் கலந்தமண். அதிலிருந்து கொஞ்சம் எடுத்து உன்ஜேபியிற் போட்டுக்கொண்டு அங்கிருந்து துரிதமாய் நடந்தாய்......" என்றதைக் கேட்டதே, டாக்டர் சொக்கநாதன் திடுக்கிட்டு விலவிலத்து ஆனந்தஸிங்கின் முகத்தை உற்று நோக்கினான்.

ஆனந்தஸிங் அதைக் கவனியாதவன்போல், கூறத் தொடங்கி, "நீ யங்கிருந்து புறப்பட்டுத் துரிதமாய் நடந்து

குருவின் வீட்டைநோக்கிச் சென்றாய். அப்போது, இதோ இச்சமயம் அணிந்திருக்கிறாயே இதே பாதரட்சையை யணிந்திருந்தாய். குருவின் வீட்டருகிற் சென்றதே நீ தோட்டவழியாகவும் வேலி யோரமாகவும் சென்று தங்க வேல் பிள்ளை இருக்கும் அறையின் சாளரத்திற்கு எதிரில் சென்று நின்றாய். அப்போது பொழுது விடிந்துவிட்டது. ஆனால் வீட்டில் ஒருவரும் நடமாடவில்லை. நீ யுடனே யுன் ஜேபியில் கொண்டுவந்திருந்த சிகப்பு மண்ணை யெடுத்துத் தங்கவேல் அறையிலிருக்கும் சாளரத்தின்மேல் விசிறி எறிந் தாய்" என்றான்.

இவற்றைக் கேட்டதே சொக்கநாதனால் அதற்கு மேலும் சமாளிக்கமுடியவில்லை. ஏனெனில் ஆனந்தஸிங் நேரில் அவன் பக்கத்திலேயேயிருந்து யாவற்றையும் பார்த் திருந்த ஒரு மனிதன்கூட கூறமுடியாதவற்றை யெல்லாம் கூறிவிட்டான். ஆகையால் அவன் துடித்தெழுந்து "அய்யா! நீ சாதாரணமனிதனல்ல; பேயாகவே யிருக்கவேண்டும்" என்றான்.

ஆனந்தஸிங் புன்னகைபுரிந்து, "உனது நற்சாட்சி ஒரு பக்கமிருக்கட்டும். நான் கூறும் மற்ற சங்கதியையும் முடிவுவரையிற் கேள். நீ இரண்டு மூன்றுபிடி மண் எடுத் துச் சாளரத்தில் எறிந்ததே, தங்கவேல் எழுந்து சாளரத் தைத்திறந்தான். நீ யவனைக் கீழறைக்கு வரும்படி கூறி னாய். அவன் துரிதமாய் அவசரத்தோடு உடைகளை யணிந்து கொண்டுவந்து அந்த அறையின் சாளரத்தைத் திறந்தான். நீ சாளரவழியாய் உள்ளே சென்றாய். கொஞ்ச நேரமே அவனோடு பேசினாய். அச்சமயம் நீ அந்த அறை யில் முன்னும் பின்னும் திரிந்துகொண்டிருந்தாய். அதன் பிறகு நீ சாளரவழியாக வெளியில் சென்று சாளரத்தை மூடிவிட்டுச் சுருட்டுப் பிடித்துக்கொண்டே என்ன நடக்கிற

தென்று பார்க்க வெளியில் நின்றுகொண்டிருந்தாய். கடைசியில் தங்கவேல் மடிந்ததே நீ வந்த வழியே போய்விட்டாய். சொக்கநாதன்! உன் செய்கைகளுக்கு இப்போதென்ன காரணம் கூறுகிறாய்? என்னை ஏமாற்ற முயன்றால் உடனே இவ்விவகாரம் என்னை விட்டுப் போலீஸாரிடம் போய்விடும்" என்றான்.

5-வது அத்தியாயம்.

டாக்டர் சொக்கநாதன் ஆனந்தஸிங் கூறிய சங்கதிகளையெல்லாம் கேட்டதே அவன் முகம் சவம்போல் வெளுத்துவிட்டது. அவன் தன் இருகரங்கள் மேலும் முகத்தைக் கவிழ்த்துக்கொண்டு சற்று நேரம் சிந்தனையிலிருந்தான். அதன்பிறகு அவன் துடித்தெழுந்து, தன் ஜேபியிலிருந்த ஒரு புகைப்படத்தை யெடுத்து ஆனந்தஸிங் எதிரில் வைத்து,

"இதோ! இதோ! இதற்காகவே இப்படிச் செய்தேன்" என்றான்.

அப்புகைப்படம் ஒரு அழகியமாதின் படம். ஆனந்தஸிங் சட்டென்று எழுந்து அதைப்பார்த்ததும், "ஆ! பங்கஜம்படம்" என்றான்.

சொக்க:—"ஆம்; பங்கஜம், சில வருடங்களாக நான் அவளை நேசித்து வருகிறேன். அவளும் என்னை நேசித்து வருகிறாள். நான் இப்போது வேட்டைக்குச் செல்லாமல் இப்பிரதேசத்திலேயே அடைபட்டிருக்கிறேன் என்று ஜனங்கள் வியப்புறுவதன்காரணம் அதுதான். இந்த உலகில் நான் அந்த ஒருமாதையே நேசித்தேன். அதனால் அவளை மணம்புரிய முடியவில்லை. ஏனெனில் எனக்கொரு மனைவியிருக்கிறாள். அவள் நெடு

நாளைக்கு முன்பே என்னைவிட்டுப் பிரிந்து விட்டாள். ஆனல் நமது நாட்டுச்சட்டங்களால் அவளை விட்டு அடியோடு விலகிக்கொள்ள முடியவில்லை. கலியாண ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ள முயற்சி செய்தும் முடியவில்லை. பங்கஜம் வருடக்கணக்காய்க் காத்துக் கொண்டிருந்தாள். நானும் இதற்காகக் காத்துக் கொண்டிருந்தேன்" என்று கூறிக்கொண்டேயிருக்கையில் அம்மனிதன் அடக்கமுடியாத் துயரத்தால் தேம்பி யழுதுவிட்டான். அவன் மனமுடைந்து விட்டது.

இரண்டொரு நிமிடங்களில் சமாளித்துக்கொண்டு தொண்டையைத் தடவிக்கொண்டு மறுபடி கூறத் தொடங்கி,

"இப்போது நான் கூறிய சங்கதி ஞானப்பிரகாசம் குருவுக்கு மட்டும் தெரியும். அவரிடம் மட்டுமே என் இரகசியத்தைக் கூறியிருந்தேன். அதனல் தான் இச்சம்பவம் நேர்ந்ததே அவர் எனக்குத் தந்தி கொடுத்தார். அவரை விசாரித்துப் பாருங்கள். பங்கஜம் ஒரு தேவமாதுக்குச் சமதையானவள் என்று கூறுவார். அத்தகைய என் காதலிக்கு இம்மாதிரி கோரமரணம் நேர்ந்தபோது என் சாமன்கள் கப்பலோடு போனலென்ன. அந்த ஆப்ரிகாவிலுள்ள சிங்கங்களைப் பற்றி யென்ன ஆகவேண்டியது. என் நடக்கையில் உனக்கு அகப்படாதிருந்த மர்மத்தின் உளவு இதுவே" என்றான்.

ஆனந்தலிங்:—"அப்புறம் கூறும்" என்றான். டாக்டர் சொக்கநாதன் தன் உள்ஜேபியிலிருந்து ஒரு கடிதப் பொட்டணத்தை யெடுத்து எதிரில் வைத்தான். அதன்மேல் ஒரு சிகப்புக் கடிதம் ஒட்டப்பட்டிருந்தது. அக்கடிதத்தில் பாஷாணம் என்றுவரையப்

பட்டிருந்தது. சொக்கநாதன் அப்பொட்டணத்தை விசுவநாதன் எதிரில் தள்ளி "அய்யா! தாங்கள் ஒரு வைத்தியர் என்று அறிவேன். இந்த முறையுமக்குத் தெரியுமா பாரும்" என்ருன். விசுவநாதன் "இது எந்த மூலிகையிலிருந்து செய்யப்பட்டது?" என்று கேட்டதற்குச் சொக்கநாதன் "இது பேய்க்கால் என்ற மூலிகை" என்ருன்.

சொக்க:—இது உமக்குத் தெரியா தென்பதால் ஒரு கௌரவத்தாழ்வு மில்லே. ஏனெனில் பூத்தூர் நகரி லுள்ள நகர உத்தியான வனத்திலிருக்கும் ஒரு செடி தவிர இக்கண்டமுழுமையும் இதில் வேருெரு செடி எங்குமேயில்லே. ஆராய்ச்சி செய்வோர் இன்னும் இதைக்கண்டு பிடித்து மூலிகையகராதியில் சேர்க்க வில்லே. ஆகையால் இது பெரும்பாலும் ஒருவர்க்கும் தெரியாதென்றே கூறலாம். இதன் வேர் பாதி மனி தன் கால் போலவும் பாதி வெள்ளாட்டின் கால் போலவும் இருக்கிறது. அதனுல் தான் இதற்கு இத்தகைய அபூர்வநாமம் கிடைத்தது. இது மேற்கு ஆப்ரிகாவில் இருக்கிறது. அங்குள்ள வைத்தியர்கள் இதைச்சில வியாதிகளுக்கு வெளி ஔஷதமாக உபயோகிக்கிருர்கள். ஆனுல் மிக்க இரகசியமாய் வைத் துக்கொண்டிருக்கிருர்கள். ஆப்ரிகாவிலுள்ள உயிங்சி என்ற நாட்டில் அபூர்வமான சந்தர்ப்பங்களால் இது எனக்குக் கிடைத்தது என்று கூறிவிட்டு அப்பொட் டணத்தைப் பிரித்துக் காட்டினன். அதில் பார் வைக்குச் சாதாரண மூக்குத்தூளேப் போன்ற ஒருவித சிகப்பான சூரணம் இருந்தது.

ஆனந்த:—"அப்புறம் சங்கதியைக் கூறுமையா" என்று கண்டிப்பாய்க் கூறினன். சொக்கநாதன் "ஆனந்தஸிங்!

உனக்கு இவ்வளவு சங்கதிகள் தெரிந்திருக்கிற வரையில் யாவற்றையுமே பூரணமாய் உண்மையாய்க் கூறி விடுகிறேன். என் அனுகூலத்திற்காக நான் அவ்வாறு செய்யக்கடமைப் பட்டிருக்கிறேன். அக்குடும்பத்திற்கும் எனக்குமுள்ள சம்பந்தம் எத்தகையதென்பதை முன்னமே கூறிவிட்டேன். பங்கஜத்திற்காக அவளுடைய சகோதரர்களிடம் நான் சிநேகம் பாராட்டி வந்தேன். இவர்களுக்குள் பணவிஷயத்தைப்பற்றிக் கொஞ்சம் மனஸ்தாபம் நேர்ந்தது. அதனால் தங்கவேல் குடும்பத்திலுள்ள மற்றபேரை விட்டுத் தனியே போய் விட்டான். ஆனால் பிறகு அம்மனஸ்தாபம் நீங்கி விட்டதாகவும் இவர்கள் பழையபடி சிநேகபாவமாகவே நடந்து கொள்வதாகவும் புலப்பட்டது. நான் இவனையும் கண்டு பேசுவது. அவர்களிடமும் சென்று பேசுவது. தங்கவேல் ஆழ்ந்த நெஞ்சும் கபடமுமுடையமனிதன். மிக்க சூழ்ச்சிக்காரன். பல சந்தர்ப்பங்களில் இவனுக்கு அவர்கள் மேலுள்ள அன்பும், அவன் காட்டும் சிநேக வாஞ்சையும் உண்மையான வல்லவென்று எனக்குச் சந்தேகம் தோன்றியது. இவன் மறுபடி சச்சரவு கிளப்புவான் என்றே கருதினேன். ஆனால் திடீலென்று விபரீதமான விஷயமாவது கடுமையான சண்டையாவது நேரிடுமென்று நான் எண்ணியிருக்க வில்லை. சண்டைக்குக் காரணம் இருப்பதாகவே எனக்குப் புலப்படவில்லை.

இவ்வாறிருக்க, சுமார் இரண்டு வாரங்களுக்கு முன் ஒரு நாள் தங்கவேல் என் வாசஸ்தலத்திற்கு வந்தான். அச்சமயம் நான் என்னிடமிருந்த ஆப்ரிகா நாட்டு அபூர்வ பண்டங்களில் சிலவற்றை யவனுக்குக் காட்டினேன். அவற்றில்

அச்சூரணமும் ஒன்று. நான் இதை யவனுக்குக்காட்டி இதன் புகை மூக்கில் பட்டவுடனே மனிதனுடைய புத்தி சுவாதீனத்தையும் யோசனை செய்கை யாவற்றையும் அப கரித்துக்கொண்டு மிக்க பயத்தை யுண்டாக்கி விடுகிறதென் றும், என்றும் காணுத அகோர உருவங்களை யெல்லாம் தோன்றச்செய்து கடைசியில் அடியோடு பயத்தாலேயே மடியச்செய்கிறது அல்லது பைத்தியத்தை யுண்டாக்கிவிடு கிறது என்றும் இப்பாஷாணப் புகையின் குணங்களை யெல் லாம் கூறி ஆப்ரிகா நாட்டாரில் எவனுவது அவர்கள் குரு வுக்கு ஒரு பெரிய குற்றத்தைச் செய்தால் அவனை யக்குரு இப்புகையால் தண்டிக்கிருன் என்றும் கூறினேன். அதோடு நமது நாட்டு வைத்தியசாத்திரப்படி இதனுல் மரணமோ பைத்தியமோ நேர்ந்ததென்று கண்டறிய முடியாதென்றுங் கூறினேன்.

அவன் இதை யெப்படி யெடுத்துக்கொண்டானென்று எனக்குத் தெரியாது. நான் அவன் இருக்கும் வரையில் அறையை விட்டு வெளியிற் செல்லவேயில்லை. ஆகையால் அச்சமயமே நான் குனிந்து குனிந்து பெட்டிகளைத் திறந்து சாமான்களை யெடுத்துக்கொண்டும் மறுபடி வைத்துக் கொண்டுமிருந்த போதுதான் அவன் இதில் கொஞ்சம் எடுத் துக்கொண்டிருக்க வேண்டும். நான் இதைப்பற்றிக் கூறிய போது அவன் எவ்வளவு சூரணம் உபயோகிப்பது? எந் நேரத்தில் அது தன் வேலையை முடித்துவிடும்? என்று பல கேள்விகளைக் கேட்டது எனக்கு நன்ருய் நினைவிருக்கி றது. ஆனுல் நான் அவற்றை யெல்லாம் சாதாரணமாய் எண்ணிக்கொண்டேனே யன்றி இவன் இத்தகைய படு கொலை செய்யக் கருதுவான் என்று சற்றும் நினைக்கவில்லை.

நான் அச்சங்கதி யாவும் அடியோடு மறந்துவிட்டேன். பாலூரில் குருவின் தந்தியைக் கண்டபோது தான் எனக்கு

யாவும் நினைவிற்கு வந்தன. அந்தப்பயல் இச்சங்கதி எனக்கெட்டுவதற்குள் நான் ஆப்ரிகாவிற்குப் போய் விடுவே னென்றும் பிறகு பல வருடங்கள் திரும்பி வரமாட்டே னென்றும் எண்ணிக்கொண்டான். நான் உடனே திரும்பி வந்து விட்டேன். எத்தகைய தகவலைக் கேட்பதன் முன் னும் என் பாஷாணமே உபயோகப்படுத்தப் பட்டதென்று நான் நம்பாமலிருக்க முடியவில்லை. நான் முன்னே யுன் னிடம் ஏன் வந்தேனென்றால், ஒரு சமயம் வேறு ஏதே னும் காரணம் உன் மனதிற்குப் புலப்பட்டிருக்குமென்று கருதினேன். உனக்கு ஒன்றும் புலப்படவில்லை யென்று தெரிந்துவிட்டது. உடனே சந்தேகமின்றி இச்சண்டா ளனே கொலை செய்தவன் என்று அறிந்துகொண்டேன். இவன் அவ்வாறு செய்ததன் காரண மென்ன? பண ஆசையே யன்றி வேறொன்றுமில்லை. இப்பாஷாணத்தின் குணங்களை நன்றாக அறிந்துகொண்டான். இது அவர்கள் மூவரையும் கொன்றுவிடும் அல்லது பைத்தியமுண்டாக்கி விடும். அவர்கள் மூவரும் இறந்தால் சொத்து முழுமை யும் தன்னுடையதாய்விடும். அவர்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டால் தானே அவர்களுடைய பாதுகாவலனு வான். அப்போதும் சொத்து முழுமையும் அவனுடைய தாகவே ஆகும். இந்த எண்ணத்தோடு தான் அப்படுபாவி தன்கூடப் பிறந்த இரண்டு சகோதரர்களையும் பைத்தியக் காரர் ஆக்கிவிட்டான். தன் சொந்த தங்கையை, உலகில் நான் காதலித்த ஒரே ஸ்திரீயை, மிக்க உத்தம குணங்க ளுடையவளைக் கோரமாகக் கொலை செய்தான். அத்த கைய கொலைபாதகனுக்கு என்ன தண்டனை விதிப்பது?

நான் அதிகாரிகளிடம் முறையிட்டாலோ நான் என்ன ருசுவைக் காட்டுவது. என்வரையில் அவன் கொன்றது சத் தியம் என்று தெரியும். ஆனால் நமது நாட்டு ஜூரார்களுக்கு

கம்பகம் உண்டாகும்படி செய்யச் சரியான ருசுவென்ன விருக்கிறது. இது ஒரு பேய்க்கதை யென்று கூறுவார்கள். பெரும்பாலும் தோற்றே போகும். அப்படித் தோல்வியடைய எனக்கு விருப்பமில்லை. என் மனம் தணலாயெரிகிறது. பதிலுக்குச் சரியான வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று என் மனம் பதைக்கிறது. ஆனந்தஸிங்! நான் சட்டமென்பதையறியாத நாட்டிலிருந்தேனென்று முன்னமே உன்னிடம் கூறியிருக்கிறேனல்லவா? அக்காரணத்தால் நானே சட்டத்திற்கு விரோதமாக நடந்துகொள்ளும் வழக்கமுடையவனாய் விட்டேன்.

ஆகவே, இப்போது இவன், அந்த உத்தமியும், நிரபராதியும், இவன் சொந்த சகோதரியுமாகிய பங்கஜம் எத்தகைய மரணத்தை யடைந்தாளோ அதேமாதிரியான மரணத்தை அடையவேண்டியதே யிதற்குச் சரியான தண்டனையென்று எனக்குள் தீர்மானித்துக்கொண்டேன். அப்படிக்கில்லாவிடின் நான் என் கையாலேயே யவனுக்கும் மரணதண்டனை யளிக்கவேண்டும். நான் ஒரு உண்மை கூறுகிறேன். ஆனந்தஸிங்! இதைப்பெருமையாகக் கூறுகிறேன் என்று கருதவேண்டாம். சத்தியமாய் உண்மையே கூறுகிறேன். உயிரை யலட்சியமாய்க்கருதும் ஆள் என்னைவிட நமது நாடு முழுமையும் வேறெவனுமில்லை யென்று உண்மையாகப் பந்தயம் கட்டுவேன்.

இப்போது உனக்கு மர்மமாகவிருந்த என் சங்கதிகளையெல்லாம் நான் கூறிவிட்டேன். மற்ற சங்கதிகளை நீயே எப்படியோ யுணர்ந்து அபூர்வமான விதமாகக் கூறிவிட்டாய். நீ கூறியபடி நான் அன்று வீட்டிற்குச்சென்று சற்றேனும் நிம்மதியாய் நித்திரை செய்யவேயில்லை. அந்தோ! என் மனமிருக்கும் நிலைமையில் எவ்வாறு எனக்கு நித்திரை வரும். நீ கூறியபடி நான் சிந்தனைசெய்து ஒருவிதத்

தீர்மானம் செய்துகொண்டேன் என்பது உண்மையே. நீ கூறியபடியே அதிகாலையில் புறப்பட்டேன். அங்கு சென்று அவ் வீட்டிலுள்ள மற்ற பேர்க்குத் தெரியாமல் அவனை யெழுப்பிக் கதவைத் திறக்கச் செய்வது கஷ்டமே. இதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டே வெளியிற் சென்ற போது அங்கு பாட்டை செப்பனிடுவதற்காகப் பரல்கற்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் கொஞ்சம் எடுத்துச் சேபியில் போட்டுக் கொண்டு சென்றேன். அங்கு சென்றதும் இவன் படுக்கை யறையின் சாளரத்திற்கு நோய்க் கீழே நின்று மெதுவாய்க் கூப்பிட்டுப் பார்த்தேன். ஒரு சந்தடியுமில்லை. அதன்மேல் அந்த மண்ணை இரண்டு மூன்று முறை சாளரத்தின்மேல் அடித்த பிறகே இவன் சாளரக் கதவைத் திறந்தான். நான் கீழறைக்கு வரும்படி கூறியதும் அவ்வாறே வந்து அந்த அறையின் சாளரத்தைத் திறந்து அதன் வழியாக என்னை யுள்ளே வரச் செய்தான்.

நான் அந்த அறைக்குள் சென்றதும் என் ஜேபியில் ஆயத்தமாய் வைத்திருந்த துப்பாக்கியைக் கையிலெடுத்துக் கொண்டு "ஓ சண்டாளனே! நான் உனக்குச் சினேக வாஞ்சையால் கூறிய பாஷாணத்தைப் பற்றிய இரகசியத்தைக் கொண்டு நீ உன் இரண்டு சகோதரர்களுக்கும் பைத்திய முண்டாகச் செய்தாய். உன் கூடப்பிறந்த சகோதரியும் இவ்வுலகில் நான் காதலித்த ஓரே ஸ்திரீயுமான உத்தமியைக் கொன்றாய். இப்போது நானே இவ்விஷயத்தில் உனக்குத் தக்க தண்டனையை நிறைவேற்றும் ஆளாகவும் வந்திருக்கிறேன். நீ யுன் தண்டனையினின்றும், தப்பமுடியாது. இப்போது உனக்கு இருவிதமான தண்டனைகளிருக்கின்றன. இப்போதும் உனக்குத் தயவு காட்டி அவை இரண்டில் உனக்கெது பிரியமோ அதை யேற்றுக்கொள்ளும்படி கேட்கிறேன். ஒன்று இத்

துப்பாக்கியால் உன்னைச் சுட்டுவிடுகிறேன். அப்படிச் செய்தால் உன் கொலைபாதகம் நாடு முழுமையும் பகிரங்கமாய்விடும். மற்றொன்று உன் தங்கை மடிந்த மாதிரியே அதே பாஷாணத்தால் மடிந்து போக உடன்படு. அது ஒரு காரணத்தையும் வெளிவாராமல் மறைத்துவிடும். அதற்குச் சம்மதமாயில் இதோ மேஜையின் மேலிருக்கும் தீபத்தினெதிரில் இந்த நாற்காலியில் உட்கார்ந்து உன் பாபங்களை மன்னிக்கும்படி ஆண்டவனைப் பிரார்த்தித்தபடியிரு. ஓ சண்டாளனே! நீயுன் சகோதரர்களுக்கு, முக்கியமாக, மடிந்த உன் சகோதரிக்கு இந்த அவகாசம் கூட அளிக்கவில்லை யென்பதை யெண்ணிக்கொள்" என்று கூறினேன்.

அச்சண்டாளன் பேசாமல் சென்று நான் கூறியபடி நாற்காலியில் உட்கார்ந்தான். நான் உடனே தீபத்தில் பாஷாணத்தைப் போட்டுவிட்டு வெளியில் வந்து சாளரவழியாய் அவனை நோக்கிக்கொண் டிருந்தேன். அவன் ஐந்து நிமிடங்களில் மடிந்தான். ஆனால் கடவுளே! எத்தகைய கோரமான மரணம். என் மனம் தாளவில்லை. அப்படியிருந்தும் இவன் தந்தை யிவனுக்குமுன் இதேமாதிரி கோரமாகவே தானே இவனால் கொல்லப்பட்டான் என்பதை யெண்ணியபோது என் மனம் வச்சிரமாய்விட்டது. அவன் மடிந்ததும் நான் நீ கூறியபடி வந்த வழியே என் வீட்டிற்குச் சென்றேன்.

ஆனந்தஸிங்! இதுவே நடந்த உண்மையான சரித்திரம். இப்போது நானும் என் பிராணனும் உன்கையிற் சிக்கிக்கொண்டிருக்கிறோம். நான் உயிரை யிலட்சியம் செய்கிற ஆசாமியல்ல வென்பதைப் பற்றி முன்னமே கூறியிருக்கிறேன். இன்னும் ஒன்று மட்டுமே கூறுகிறேன். நீ யுன் ஆயுளில் இத்தகைய ஒரு உத்த

மியைக் காதலித்து அவளுக்கு இவ்வாறு ஒருவன் செய்தால் நீயும் நான் நடந்துகொண்ட மாதிரியே நடந்துகொள்வாயா அல்லவா வென்பதைப்பற்றி மட்டும் உன் மனச்சாக்ஷியைக்கேள். இனி நீ எவ்வாறு செய்தாலும் நான் அதேப்படி யொப்புக்கொள்ளச் சித்தமாகவிருக்கிறேன்" என்றான்.

ஆனந்த:—"சரி. நான் இதை யறிந்துகொண்டு உன்னை வரவழைத்து விசாரிக்காமலிருந்தால் நீ என்ன செய்யக் கருதியிருந்தாய்?" என்று வினவினன்.

டாக்டர் சோக்கநாதன்:--"நான் ஆப்ரிகாவில் பாதி வேலையே செய்தேன். இன்னும் பாதிவேலை யங்கு பாக்கியாகவே யிருக்கிறது. நான் நேராக அங்குசென்று இனி யென் வாழ்நாட்களை யந்த அடவிகளிலேயே கழித்து விடுவதெனத் தீர்மானித்து விட்டிருந்தேன்" என்றான்.

ஆனந்த:—"சொக்கநாதரே! நீர் தாராளமாக ஆப்ரிகாவிற்குச்சென்று உமது வாழ்நாட்களைச் சுகமே கழிக்கலாம். என் வரையில் ஒரு ஆக்ஷேபனையுமில்லை" என்றான்.

டாக்டர் சொக்கநாதன், அஷ்ட தரித்திரனுக்குத் திரண்ட செல்வம் வந்ததுபோலவும், எமன் கையில் சிக்கிய பின் அவனால் மன்னித்து விடப்பட்டதுபோலவும் அடங்காத சந்தோஷமடைந்து ஆனந்தஸிங்கின் இருகாங்களையும் பற்றிக்கொண்டு, "ஓ! உத்தமமான நீதிபதியே! நான் என் நன்றியை யுமக்கு எவ்வாறு காட்டுவதென்று எனக்குப் புலப்படவில்லை. என் உயிருள்ளவரையும் உம்மை வாழ்த்திக்கொண் டிருப்பேன்...." என்று கூறி விடை பெற்றுக் கொண்டு சென்றான்.

டாக்டர் சொக்கநாதன் சென்றதும் ஆனந்தஸிங் விசுவ

நாதனை நோக்கி, "நண்பனே! நாம் சட்டத்திற்காவது அதிகாரிகளுக்காவது கட்டுப்பட்டவர்களல்ல. அதிகாரிகள் இதன் உண்மையை யொருபோதும் அறியப்போகிறதில்லை. நாமே நம் சொந்த முயற்சியில் இதைக் கண்டு பிடித்தோம். இதை நாம் அதிகாரிகளுக்கு அறிவிக்கக் கடமைப்பட்டவர்களல்ல. மனசாட்சி யொன்றிருக்கிறது. அதற்கு ஒப்பாததை யெவனும் எப்போதும் செய்யலாகாது. உண்மையில் பங்கஜத்தைப்போன்ற மாதின்மேல் நான் சொக்கநாதன்போல் சத்தியமும் பரிசுத்தமுமாகிய காதல் கொண்டிருந்து, அத்தகைய என் காதலியை ஒருவன் இவ்வாறு முழுதும் அக்கிரமமாய்க் கொன்றிருந்தால் நானும் சொக்கநாதன் நடந்து கொண்டது போலவே நடந்து கொண்டிருப்பேன் என்பதிற் சற்றும் சந்தேகமில்லை. இனி நான் சொக்கநாதன் விவகாரங்களை யெப்படி யறிந்துகொண்டே னென்பதைப் பற்றி கூறுகிறேன்.

எனக்கு முதல் விவகாரத்தைச் செய்தவன் தங்கவேல் தான் என்று முன்னமே பூரண சந்தேகமாக-ஏன் ஏறக் குறைய நிச்சயமாகவே தெரிந்திருக்கிறது. அதோடு இந்தச் சொக்கநாதன் அந்த இரவு பாலூர் ஹோட்டலி லிருந்திருக்கிறான் என்றும், ஆனால் இந்த விஷயத்தில் அவனுக்கு எவ்விதமாகவோ சம்பந்த மிருக்கிற தென்பதும் முன்னமே புலப்பட் டிருக்கிறது. ஆகவே தங்கவேல் மடிந்தது ஒன்று தற்கொலையா யிருக்கவேண்டும். இன்றேல் இன்னொருவர் செய்த கொலையாயிருக்க வேண்டும். தற்கொலையாயின் அவன் அந்தக் கோரசம்பவங்கள் நடந்த இவ்வளவு சீக்கிரமாய், யாவர்க்கும் பெரிய சந்தேகம் உண்டாகும்படி, இதே யிடத்தில் செய்துகொள்ள மாட்டான். எப்போதும் ஆத்திரத்தால் ஒரு காரியத்தைச் செய்து விட்டவன்றான் பின்னால் அதற்காக மனஸ்தாப மடைவான்

வேண்டுமென்று முன் யோசனையோடு செய்தவன் அப்படி மனஸ்தாபப் படமாட்டான். இவன் தன் கூடப்பிறந்தவர்களுக்கே யத்தகைய கெடுதியைச் செய்தது பணத்திற்காகவே. பண ஆசைபிடித்தவன், அது தன் கைக்கு எட்டிய சமயத்தில் எங்கேனும் தற்கொலை செய்து கொள்வானோ? ஒரு போதும் செய்யான். ஆகையால் இது கொலையே என்று எனக்கு விளங்கிவிட்டது. உடனே என் மனம் சொக்கநாதன் மேல் நாடியது. சாளரத்தின் வெளியிலிருந்த காலடிகள் அவன் காலடிகளே யென்று முன் நாள் கண்ட அனுபவத்தால் தெரிந்து கொண்டேன். சாளரத்தில் எறியப்பட்டிருந்த அம்மாதிரி மண் குருவின் வீட்டருகிலில்லை. சொக்கநாதன் வீட்டெதிரில்தான் இருக்கிறது.

இவையாவும் சேர்த்து யோசித்தபோது எனக்குச் சங்கதி விளங்கிவிட்டது. கடைசியில் நமது உத்தேசமே உண்மையென்று விளங்கிவிட்டது. இனி நாம் இதை நம் மனதில் மட்டும் வைத்துக்கொள்ள வேண்டியதே. உன் அபிப்பிராயம் என்ன?" என்றான்.

விசுவநாதன் :—"நீ கூறியயாவும் மனச்சாட்சிக்கு ஒத்தவையே யாதலின் எனக்கும் இதே சரியென்றுதான் புலப்படுகிறது" என்றான்.

யுத்தத்தின் மர்மங்களும் தந்திர சாமார்த்தியங்களும்.

1-வது அத்தியாயம்.

ஐந்தாறு வருடங்களுக்கு முன் நடந்த கோரமான மகா பெரிய ஐரோபாயுத்தத்தை நண்பர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அந்த யுத்தம் தொடங்குவதற்குப் பலவருடங்களுக்கு முன்பாகவே ஜர்மெனி அத்தகையயுத்தத்தைத்

தொடங்கி உலகில்; தன் பலத்தையும் செல்வாக்கையும் நிலைநிறுத்தி உலகம் முழுமையும் தனக்கு அடங்கியிருக்கச் செய்யவேண்டுமென்று கருதியது. ஆகையால் அப்போது முதலே அதற்கு வேண்டிய தந்திரமும் சாமார்த்தியமுமான சூழ்ச்சிகளையெல்லாம் செய்யத் தொடங்கிவிட்டது.

அதற்காக ஜர்மனியின் சக்கிரவர்த்தியாகிய கெய்ஸரும் அவருடைய மந்திரிமார்களும் செய்த ஏற்பாடுகளையெல்லாம் விவரித்துக் கூறவேண்டுமாயின் அதுவேயொரு பெரிய புத்தகமாய் விடும். ஆகையால் அதன் அளவும் ஆச்சரியமும் ஒருவாறு புலப்படும் வண்ணம் இரண்டொரு விஷயங்களை மட்டும் கூறிவிட்டு அதிற் சம்பந்தப்பட்ட நமது கதையைத் தொடங்குவோம்.

ஜர்மெனி முதலாவது இந்த வேலைக்கென்று எண்ணிறந்த காரியஸ்தர்களையும் ஒற்றர்களையும் ஏற்படுசெய்து, பிரான்சு, இரஷியா, பெல்ஜியம், டென்மார்க், நார்வே ஸ்விடன், இடலி, ஸ்விட்ஸர்லாந்து, எல்லாவற்றிலும் முக்கியமாய் இங்கிலாந்து முதலிய நாடுகளில் நிறப்பிவிட்டது. அந்த ஒற்றர், காரியஸ்தர்களில் பெரும்பாலார் அன்னிய நாட்டில் சென்று அங்கே நிலையாய் வர்த்தகம் செய்கிறவர்கள் போலவும் கைத்தொழில் செய்கிறவர்கள் போலவும் அந்த நாடுகளில் வீடுகள் வாங்கிக் கொண்டு கூட நிலையாக வசித்துவந்தார்கள். இவர்களுக்கெல்லாம் கெய்ஸரினிடமிருந்து மாதா மாதம் சம்பளம் கொடுக்கப்பட்டு வந்தது. அச்சம்பளம் எவ்வாறு அளிக்கப் படுவதெனில், இதற்கென்றே ஒரு பிரத்யேக இலாகாவும் அதற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்கள் முதலிய யாவும் மிக்க திட்டமாய் அமைக்கப் பட்டிருந்தது எங்கெந்த ஊரில் யாரார் சென்றிருக்கிறார்கள் அவர்கள் ஒவ்வொருவரும் என்ன தொழில் செய்து கொண்டிருக்கிறார்

கள் என்பது முதலிய எல்லா தகவல்களும் விவரமாக பதி யப்பட்டிருக்கும்.

சிலர் மாதம் ஒருமுறை சிலர் மூன்று மாதத்திற்கொரு முறை அந்த இலாகா காரியாலயத்திலிருந்து வேண்டிய பணத்தொகையோடு புறப்படுவார்கள். இவர்கள் தண்டல் பணம் தண்டும் வர்த்தகனைப் போலவும், யாத்திரை செய் வோர் போலவும் தங்கள் வேவு ஆட்கள் இருக்குமிடங் களுக்குச் சென்று அவர்கள் சம்பளங்களை யளித்துவிட்டு அவர்கள் சேகரம் செய்திருக்கும் உளவுகளை வாங்கிக் கொண்டு போவார்கள். இந்த வேவு ஆட்களோ வர்த்த கம் செய்துகொண்டும், வேறு கைத்தொழில் முதலிய வேலைகளைச் செய்துகொண்டும் இராஜாங்கத்தில் நடக்கும் விஷயங்களையும், ஆங்காங்குள்ள சேனைகளின் தொகை, தளவாடங்களின் அளவு, கோட்டை கொத்தளங்கள் இதா பாதுகாப்பு ஸ்தலங்கள் இருக்குமிடம் இவைகளை யெல்லாம் குறிப்பிட்டு வைத்துக்கொள்ளுதல், கோட்டைகள், யுத்தக் கப்பல்கள் இவற்றின் படங்களை யெழுதி வைத்துக்கொள்ளு தல், முதலிய வேலைகளை செய்வார்கள்.

இவர்களில் வர்த்தகன் போல் நடித்த ஒருவன் பெல்ஜி யத்தில் தலை நகரில் வர்த்தகசாலை வைத்திருந்தான். இவன் அங்கு ஒரு பெரிய வீட்டைச் சொந்தமாய் வாங்கிக்கொண் டான். அதன் பின் பக்கம் பெரிய தோட்டமிருந்தது. அவன் தோட்டத்தில் நிலவறைகள் இரகசியமாய்க் கட்டி விட்டான். ஜர்மெனியிலிருந்து சாமான்கள் வருவதுபோல் துப்பாக்கிகள் தோட்டாக்கள் வெடி குண்டுகள் முதலிய யுத்த தளவாடங்கள் இரண்டு மூன்று வருடங்களாக இவ னுக்கு அனுப்பப்பட்டு வந்தன. இவன் அவற்றை யெல் லாம் நிலவறைகளில் மறைத்து வைத்தான். இவ்வாறு ஏராளமான யுத்த தளவாடங்கள் இவனால் அங்குசேர்க்கப்

பட்டன. கடைசியில் ஜர்மெனி பிரான்சின்மேல் படை யெடுத்துவரும்போது பெல்ஜியத்தின் வழிச்செல்வதென்று தீர்மானிக்கப்பட்டதே இவன் கடையையும் வீட்டையும் மூடிவிட்டு ஜர்மெனிக்குப் புறப்பட்டான். சாதாரண மாகவே இரண்டு தேசங்களுக்கு யுத்தம் நேரிட்டால் யுத்த ஆரம்பத்திற்கு முன்னடியே தமது தேசத்திலுள்ள எதிரி நாட்டார்களெல்லாம் அவர்கள் தேசத்திற்குப் போய்விட வேண்டும் அல்லது தம் நாட்டைவிட்டுச் செல்லவேண்டும் என்று இருகட்சி துரைத்தனத்தாரும் விளம்பரம் செய்து விடுவார்கள். பெல்ஜியத்தின் இராஜதானியை விட்டுப் புறப்பட்ட அந்த ஜர்மென் வர்த்தகன் பெல்ஜிய எல்லையைக் கடந்து போய் எதிரில் வரும் தன் தேசப்படைகளோடு சேர்ந்துகொண்டு அவர்களுக்கு வழிகாட்டியாய் அவர்களை பெல்ஜியத்திற்குள் அழைத்துவந்தான். அவர்கள் அதிக மான யுத்த தளவாடங்களைக் கையில் கொண்டுவருவது கஷ்டமாதலால் கொஞ்சமே கொண்டு வந்தார்கள். உள்ளே நுழைந்ததும் அந்த வர்த்தகன் தான் சேர்த்து வைத் திருந்த யுத்த தளவாடங்களை யவர்களிட மொப்பித்துவிட் டான்.

ஜர்மெனிக்கும் இங்கிலாந்துக்கும் யுத்தம் தொடங்கும் சமயம் இலண்டன் நகரத்தில் மட்டும் நூற்றுக்கணக்கான ஜர்மென் வேவுகாரர் இருந்தார்கள். இவர்கள் யுத்த தள வாடத் தொழிற்சாலைகளிலும், யுத்தக் கப்பல்களிலும் வேலை செய்யும் ஆட்களைத் தந்திரமாய்ச் சினேகம் செய்து கொண்டு ஹோட்டல்களில் அவர்களோடு சிற்றுண்டி சாரா யம் அருந்தும்போது பேசிக்கொண்டே யிருந்து மெது வாய் ஆங்காங்கு எவ்வளவு யுத்த தளவாடங்களிருக்கின் றன ஒவ்வொரு யுத்தக்கப்பலிலும் எத்தனை பீரங்கிகளிருக் கின்றன என்பது முதலிய தங்களுக்கு அவசியமான உளவு

களை யெல்லாம் கேட்டறிந்து கொள்வார்கள். இவர்கள் தங்கள் உண்மையை ஆங்கிலர் தெரிந்து கொள்ளவில்லை யென்று எண்ணி அனேகம் விஷயங்களைச் சேகரம் செய்து வைத்திருந்தார்கள். யுத்தம் விளம்பரம் செய்யப்படும் போதே இவர்களைப் போய் விடும்படி கூறிவிடுவார்கள். அப்போது நாம் நமது நாட்டிற்குச் சென்று நம்மை யனுப் பிய அதிகாரிகளிடம் நாம் சேகரித்த உளவுகளைக் கொடுத்து நல்ல பரிசுப்பணம் பெறலாம் என்று எண்ணி யிருந்தார்கள். உளவின் விசேஷத்திற்குத் தக்கபடி பணம் அளிக்கப்படும்.

ஆனல் ஆங்கிலேயரோ ஏமாந்திருக்கவில்லை. ஆங்கில துப்பறிவோரும் வேவு ஆட்களும் அச்சமயம் மிக்க சுறு சுறுப்பாக வேலை செய்தார்கள். ஜர்மென் ஆட்கள் எவ்வாறு உளவுகளை யறிகிறார்கள் என்று உணர்ந்து அவர்கள் யுத்த தளவாடத் தொழில் சாலைகளிலும் கப்பல்களிலும் வேலை செய்வோரைப் போல் மாறுவேடமணிந்துகொண்டு ஜர் மன் உளவாளிகளிடம் தாங்கள் மயங்கிப்போனவர்கள் போல் நடித்து அவர்களிடம் சிற்றுண்டி சாராயம் அருந்திக் கொண்டே கூடியவரையில் அவர்கள் என்னென்ன உளவு களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் என்பதை யறிந்துகொண் டார்கள். இதைவிட முக்கியமான தென்னவெனில் ஜர்மன் உளவாளிகளில் வர்த்தகம் செய்வோர் ஹோட்டல் வைத் திருப்போர், கைத்தொழில் செய்வோர் இவர்களில் ஒருவ ரைக் கூட விடாமல் ஒவ்வொருவருடைய பெயர் அடை யாளங்கள் அவர்கள் சினேகர்கள், அவர்கள் வாசஸ்தலம் முதலிய யாவும் திட்டமாய் அறிந்துகொண்டு பதிவுசெய்து வைத்திருந்தார்கள்.

அச்சமயம் கெய்ஸருடைய சுற்றத்தாரே யொருவர் ஜர்மன் மந்திரியாய் இலண்டனில் வந்து இங்கிலீஷ் துரைத் தனத்தின் அபிப்பிராயங்களைக் கெய்ஸருக்கு அறிவித்துக்

கொண்டிருந்தார். கடைசி வரையில் இங்கிலாந்து அந்த யுத்தத்தில் பிரான்சு பெல்ஜியத்திற்கு உதவியாய் பிரவே சிக்கும் என்று அந்த மந்திரிக்கே தெரியாது. கடைசியில் நாளை காலை யுத்தம் விளம்பரம் செய்ய விருக்கும்போது முன்னாள் இரவு இலண்டனிலிருந்த ஜர்மன் உளவாளிக ளெல்லாம் விடிவதற்குள் ஒருவர் தப்பாமல் அவரவர்கள் படுக்கையிலேயே பிடிக்கப்பட்டார்கள். அவர்கள் சேகரம் செய்து வைத்திருந்த உளவுகள், எழுதி வைத்திருந்த கோட்டைகள், யுத்தக் கப்பல்கள் முதலியவற்றின் திட்ட மான படங்கள் முதலிய யாவும் கைப்பற்றப்பட்டன. அப் போது தான் அவர்கள் எவ்வளவு சாமார்த்தியமாய் வேலை செய்தார்களென்று வெளியாயிற்று. இங்கிலாந்து முழு மையும் இன்ன இன்ன விடத்தில் இன்ன வித சேனை இவ் வளவு தொகை, இத்தனை பீரங்கி, இன்ன இடத்தில் கோட்டை (படத்தோடு), இத்தனை யுத்தக் கப்பல்கள், ஒவ் வொன்றிலுமுள்ள ஆட்கள், பீரங்கிகள், கப்பல் பெயர், படம், வயது முதலிய எல்லா தகவல்களும் அவர்களிடம் அகப்பட்டன. அத்தகைய காலத்தில் இப்போது நாம் கூறப்போகும் சம்பவம் நிகழ்ந்தது.

19—வருடம் ஆகஸ்ட் மாதம் 2-ம் தேதி இரவு ஒன் பது மணி யிருக்கும். இந்த அக்கிரம உலகத்தின்மேல் முன்பே ஆண்டவன் சாபம் புறப்பட்டது போல் தோன்றி யது. தேகத்தில் வெட்டுப்பட்டால் தோன்றும் பிளவுபோல் வானத்தில் மேற்கில் ஒரு சிவந்த பெரிய கீற்று ஜொலித் துக்கொண்டிருந்தது. மேலே பிரகாசித்துக் கொண்டிருக் கும் நக்ஷத்திரங்களுக்குப் போட்டிபோல் குடாவிலுள்ள கப்பல்களின் தீபங்கள் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. கடலோரத்தில் ஒரு பெரிய வீடும் அதன் பின்னால் ஒரு தோட்டமுமுண்டு. அத்தோட்டத்திலுள்ள உலவும் பாதை

யில் அங்குள்ள மதில் சுவரின் ஓரத்தில் இரண்டு ஜர்மெனியர் நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் பிரசித்தி பெற்றவர்கள். அவர்கள் இருவரும் நெருங்கி நின்றுகொண்டு இரகசிய விஷயமாய் மெதுவாய்ச் சம்பாஷித்துக்கொண் டிருக்கிறார்கள்.

இவர்களில் ஒருவன் பெயர் வான் போர்க் ('வான்' என்றால் ஆங்கிலத்தில் லார்ட்). இவன் மிக்க பிரசித்தபெற்ற ஆசாமி. கெய்ஸருடைய காரியஸ்தர்களில் இவனுக்கு இணையானவர் ஒருவருமில்லை யெனலாம். இவனுடைய அரிய சாமார்த்தியங்களை யறிந்து தான் இவனை ஆங்கில இராஜாங்கத்தோடு சம்பந்தப்பட்ட விஷயத்தை நடத்துவதற்காக கெய்ஸர் அனுப்பினார். அது மகா முக்கியமான விஷயம். அதில் பிரவேசித்ததும் அவனுடைய சாமார்த்தியம் மேலு மேலும் பிரகாசிக்கத்தொடங்கியது. அந்த விஷயத்தின் உண்மையில் சம்பந்தப்பட்டவர்கள் ஐந்தாறுபெயர்கள் மட்டுமே. அவர்களில் ஒருவர் இப்போது இவன் கூடச் சம்பாஷித்துக் கொண்டிருக்கும் வான்ஹெர்லிங் என்பவன். இவன் இலண்டனிலுள்ள ஜர்மென் மந்திரிகள் சங்கத்தின் பிரதம காரியதரிசி. இவன் இலண்டனிலிருந்து வந்து வான் போர்க் என்பவனோடு சம்பாஷித்துக்கொண் டிருக்கிறான். இவனுடைய நூறு குதிரை வேகம் பொருந்திய மோடார் வண்டி அருகிலுள்ள கிராமத்தின் வீதியில் காத்துக் கொண்டிருக்கிறது.

வான் ஹெர்லிங்:—“விவகாரங்களின் போக்கை யுள்ளபடியே நான் கவனிக்கிற வரையில் இன்னும் ஒரு வாரத்திற்குள் நீ பெர்லினி விருப்பா யென்று கருதுகிறேன். வான் போர்க் நீ அங்கு சென்றதே உனக்குக் கிடைக்கும் வரவேற்பைப் பற்றி மிக்க வியப்படைவாய். இந்நாட்டில் நீ செய்யும் வேலையைப்பற்றி முதன்

மையான விடத்தில் எவ்வாறு கருதுகிறார்கள் என்பதை நான் அறிவேன்" என்றான்.

இந்த வான் ஹொர்லிங் என்பவன் மிக்க உயரமும் அகன்ற மார்பும் பருத்த சரீரமுமுடையவன். எப்போதும அழுத்தமாகவும் நிதானமாகவும் பேசுகிறவன். இதனால் தான் இராஜாங்க விஷயங்களில் இவனுக்குச் செல்வாக்குண்டாகியது. அவன் மனவுருதியும் தீக்ஷ்ணியமான புத்தியும் அவன் நேத்திரங்களில் வெளிப்படையாகவே பிரகாசித்துக் கொண்டிருந்தன.

வான்போர்க் குறுநகைபுரிந்து, "இவர்கள் சுலபமாய் ஏமாற்றப்படக்கூடியவர்கள். இவர்களைப்போல் வணக்கமும், டம்பாகாரமில்லாத்தன்மையும் உடையவர்கள் வேறு ஒருவருமில்லை யென்று கருதுகிறேன்" என்றான்.

வான் ஹொர்லிங்:—"அதென்னமோ எனக்குத் தெரியாது. இவர்கள் நடக்கையில் ஆச்சரியமான ஒரு எல்லையிருக்கிறது. அதை மட்டும் நன்றாகக் கவனித்துக்கொள்ள வேண்டும். இவர்களிடத்தில் மேல் பக்கத்தில் தோற்றும் அவ்விஷயமே அன்னியர்கள் இவர்களிடம் ஏமாந்து போவதற்கு ஒரு வேலைபோலிருக்கிறது. சாதாரணமாய்ப்பார்த்தால் மேலுக்கு இவர்கள் மிக்க மிருதுவான உள்ளமுடையவர்களாகக் காணப்படுகிறார்கள். திடீரென்று இவர்களிடமுள்ள கடினபாகம் புலப்படுகிறது. இப்போது நீ அந்த எல்லைக்கு வந்து விட்டாய்; இனி அதற்குத்தக்க விதமாய்த் தந்திரத்தோடு நடக்கவேண்டும். திருட்டாந்தமாய்க் கூறுகிறேன். இத்தீவாரின் இலௌகீக ஒழுக்கங்களில் ஒரு ஆச்சரியமான மாதிரியிருக்கிறது. அதைக் கட்டாயம் கவனிக்கவேண்டும்" என்றான்.

வான்போர்க் பெருமூச்சுவிட்டு "அதாவது இவர்கள்

மேலுக்கு மிக்க நாணயமாகப் பேசுவது; மெருகிட்டுப் பேசுவது முதலியவைகளைக் கூறுகிறாய்" என்றான்.

வான் ஹோர்லிங்:—"இவர்களுக்கு அன்னிய நாட்டாரின் விஷயங்களில் சிலவற்றில் ஒருவித வெறுப்பிருக்கிறது. ஒரு திருஷ்டாந்தம் கூறுகிறேன். என் பெரிய தவறுகளில் ஒன்றையே திருஷ்டாந்தமாகக் கூறுகிறேன். உனக்கு என் வேலைகளும் நாம் ஜெயமடையும் மாதிரிகளும் நன்றாகத் தெரியுமாதலின் என் குற்றத்தையும் உன்னிடம் ஒப்புக்கொள்ளுகிறேன். அது நான் இங்கு வந்தவுடனே நேர்ந்தது. இங்குள்ள ஆங்கில மந்திரிகளில் ஒருவர் தமது நாட்டுமாளிகையில் தோட்டவிருந்து வைத்தார்: அதற்காக எனக்கும் அழைப்புச்சீட்டு வந்தது. இந்த இங்கிலீஷ் ஆட்கள் நெய் ஒழுகுவதுபோல மிக்க நாணயமாகப் பேசுவதில் கெட்டிக்காரர்கள். எவ்வாறோ அவர்கள் பேசிய மாதிரியால் நான் மிக்க அசாக்கிரதையாய் ஒரு சங்கதியை வெளியிட்டு விட்டேன்..." என்றபோது,

வான்போர்க் "ஆம் ஆம். அச்சமயம் நானும் அங்கு வந்திருந்தேன்" என்றான்.

வான் ஹோர்லிங்:—"ஆ அப்படியா நடந்த சங்கதியாவும் நமது பிரதம மந்திரிக்கு அறிவித்து விட்டேன். அந்த விவகாரத்தில் அவர் சற்று கடினமான விதமாக நடந்து கொண்டார். அச்சங்கதி யெனக்கு நேராய் எட்டியது. மிருதுத் தன்மை என்பது பிரிடிஷாரிடம் இந்த விஷயத்தில் இல்லவே யில்லை. நான் நிச்சமாய்க் கூறுகிறேன். அத்தவறால் எனக்கு எத்தகைய தீங்கு நேர்ந்தது தெரியுமா? நான் இங்கு இரண்டு வருடங்களாக வசித்து வருகிறேன். நீ யிப்போது வேட்டை

யாடுகிறவன் என்று நடித்துக்கொண் டிருக்கிறாய்..." என்றதே,

வான் போர்க்:—"சே சே! நடிப்பல்ல, நான் இயற்கையாகவே வேட்டையாடுவதில் மிக்க விருப்பமுடையவனென்று பிரசித்தி பெற்றவன். இங்கும் வேட்டையாடுவதால் சுகமாகக் காலங்கழிக்கிறேன்" என்றான்.

வான் ஹோர்லிங்:—சரி உன் காரியத்திற்கு இது பின்னும் அனுகூலமாய் விட்டது. நீ இவர்களோடு வேட்டையாடுகிறாய், பந்தாடுகிறாய், குதிரைப்பந்தயம் விட்டு ஜெயிக்கிறாய், இன்னும் இராணுவத்திலுள்ள வாலிப உத்தியோகஸ்தரோடு மல்யுத்தம், குத்துச்சண்டை செய்கிறாய், இவற்றாலுண்டாகிற நன்மை யென்னவெனில் உன்னை யொருவரும் சற்றேனும் சந்தேகமான விதமாய்க் கருதுவதில்லை, ஒருவரும் உன்னைக் கவனிப்பதேயில்லை, நீ நல்ல அனுபவசாலியாகிய வேட்டையாளென்றும், ஜர்மானியருக்குள் மிக்க ஒழுங்கும் நாணயமு முடையவனென்றும் கருதப்படுகிறாய். இங்கிலீஷ்காரரில் பணக்கார வாலிபர்கள் இராக்காலங்களில் நெடுநேரம் வரையில் கேளிக்கை விளையாட்டுகளிலும் ஹோட்டல்களிலும் பணத்தை யலட்சியமாய்ச் செலவு செய்துகொண்டு காலத்தைக் கழிப்பதுபோல நடந்துகொள்கிறார்கள். அவர்கள் "இவன் தாராளமாய்க் குடிப்பவன், உதாரகுணத்தோடு பணத்தைச் செலவு செய்கிறான் என்று உன்னைப் புகழ்ந்து கொண்டாடுகிறார்கள். ஆனால்உண்மையில் இந்தச்சாந்தமான உனது நாட்டுமாளிகை இங்கிலாந்துக்குண்டாகும் கெடுதிகளில் பேர்பாதிக்கு அதிகமானவற்றின் உற்பத்தி ஸ்தானமாக விளங்குகிறது. எல்லாம் புத்தி

சாமார்த்தியம். நண்பனே யாவும் மிக்க புத்திசாமார்த்தியமே" என்றான்.

வான் போர்க்:—"நண்பனே நீ யென்னை யதிகமாகப் புகழ்கிறாய். ஆனால் நான் இங்கு வசிப்பதில் செலவழித்த நான்கு வருடங்களும் பயனற்றுப்போகவில்லை யென்பது உண்மை. ஆ! நான் இதுகாறும் என் சரக்குகள் சேகரம்செய்து வைக்கப்பட்டிருக்கும் கிடங்கை யுனக்குக் காட்டவில்லையே. உன்போன்ற நண்பனுக்கு அவசியம் அதைக்காட்டவேண்டும். அது மிக்க சிறிய கிடங்கே. தயவுசெய்து உள்ளே வா" என்றான்.

வான்போர்க் வான்ஹொர்லிங்கை மேல்மாடிக்கழைத்துச்சென்றான். அவன் அழைத்துச்சென்ற அறை வாசிகசாலை. அதன்வாயிற்படி வெளியான தளத்தைப்பார்த்தபடியிருக்கிறது. வான்போர்க் கதவைத்திறந்து ஹொர்லிங்கையுள்ளே யழைத்துச்சென்றபின் அங்கிருந்த மின்சார விளக்கை யேற்றும் பொத்தானை யழுத்தினான். பிறகு கதவை மூடிவிட்டு மிக்க ஜாக்கிரதையாய்ச் சாளரத்திலிருந்த தடித்ததிரையைத் தொங்கவிட்டான். இந்த எச்சரிக்கையான காரியங்களையெல்லாம் செய்தபின்பே அவன் தன் நண்பனிடம் பேசத்திரும்பினான்.

அவன் வான்ஹொர்லிங்கை நோக்கி, "என்னிடமிருந்த பத்திரங்களில் சில களவுபோயின. நேற்று என் மனைவியும் மற்ற ஆட்கள் முதலிய குடும்பமும் புஷ்பகிரிக்குச் சென்றபோது முக்கியமானவற்றில் தாழ்ந்த பத்திரங்களைக் கூட எடுத்துச்சென்றார்கள். மற்றவற்றிற்காக நான் இங்கு வந்திருக்கும் நமது மந்திரிகளின் உதவியைக் கோரவேண்டும்" என்றான்.

வான் ஹோர்லிங்:—எங்களுடைய பதிவுப்புத்தகத்தில் நீயும் எங்கள் பரிவாரத்தைச் சேர்ந்த ஒருவன் என்று

முன்னமே பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் உனக்காவது பொருள்களுக்காவது ஒருபயமுமில்லை. பெரும்பாலும் நாம் இங்கிருந்து போய்விடவேண்டிய தாய் நேராது. எப்படியெனில் பிரான்சு அதன் தலையெழுத்தின்படி போகட்டும் என்றே இங்கிலீஷ்காரர் விட்டுவிடுவார்கள் அவர்களுக்கு அவ்வாறு கட்டாயம் உதவி செய்யவேண்டுமென்று பந்தப்படுத்தத்தக்க உடன்படிக்கை யொன்றுமில்லை.

வான்போர்க்:—பெல்ஜியத்தைப்பற்றியோ?

ஹோர்லிங்:—ஆம் பெல்ஜியம் கூடத்தான் அப்படியே.

வான்போர்க் தன் சிரசையசைத்து விட்டு, "அது எப்படியாகுமென்று எனக்கு விளங்கவில்லை. பெல்ஜியத்திலிருக்கும் யாரேனும் அத்துமீறி ஒரு காரியத்தைச் செய்வதாயின் இங்கிலாந்து பரிந்துவந்து உதவிசெய்ய வேண்டுமென்று திட்டமான உடன்படிக்கை யிருக்கிறது. இங்கிலாந்து இச்சமயம் அதன்படி நடக்காவிட்டால் அந்த அவமானத்திலிருந்து அது தப்பமுடியாது" என்றான்.

வான்ஹோர்லிங்:—இங்கிலாந்து தற்சமயமாவது சமாதானமாக விருக்க விரும்பும்.

வான் போர்க்:—அப்படி யிருந்துவிட்டால் இங்கிலாந்தின் கௌரவத்திற்குத் தாழ்வு வாராதா?

வான் ஹோர்லிங்:—"சே சே! கௌரவம் இந்த காலத்திலா கவனிக்கத் தக்கது? அது இரண்டாவது விஷயம். பழைய காலச் சங்கதி நீ கூறுவது. அதுவுமன்றி இங்கிலாந்து இப்போது யுத்தத்திற்கு ஆயத்தமாயில்லை. ஒன்று கூறுகிறேன். நாம் பிரத்யேகமாய் யுத்த வரியென்றே நமது நாட்டில் ஐந்து கோடி வரி வசூல் செய்தோம். அது நாம் யுத்தத்திற்கு ஆயத்தம் செய்

கிறோ மென்று எல்லா பத்திரிகைகளின் முதல் பக்கம் தலைப்பில் பிரசுரித்த மாதிரியே யாகும். அதுவே யிவர்களை உறக்கத்தினின்றும் விழிக்கச் செய்யவில்லை. எங்கோ அங்கு மிங்கும் யாரேனும் ஒரு கேள்வி கேட்கிறார்கள். அதற்கு தக்க விடை என் கடமைப்படி நான் அளித்து விடுகிறேன். எங்கோ ஒவ்வொருவர் ஆத்திரமாய்க் கேட்கிறார்கள். அவர்களுக்குச் சாந்தமான விடையளித்து விடுகிறேன். இவ்வளவேயன்றி யுத்தத்திற்கு வேண்டிய முக்கியமான விஷயங்களைக் கவனிக்கும்போது நான் உறுதியாய்க் கூறுகிறேன், இவர்கள் வேண்டிய யுத்த தளவாடங்களைத் தயார் செய்யவுமில்லை. நீர் மூழ்கிக் கப்பல்கள் தாக்குவதைத்தடுக்கவும் ஒன்றும் செய்யவில்லை. பலம்பொருந்திய வெடிக்குண்டுகள் முதலியவைகளைச் செய்யவுமில்லை. ஒன்றுமே செய்யவில்லை. அப்படியிருக்க இங்கிலாந்து இப்போது இதிலெப்படிப் பிரவேசிக்கும்? அதிலும் நாம் இவ்வளவு தந்திரமாய் அயர்லாந்தில் இத்தகைய குழப்பத்தை யுண்டாக்கி விட்டிருக்கும்போது இங்கிலாந்து இப்போது தன் வீட்டு விவகாரத்தில் சரியாய்த் தன் சிந்தனையைச் செலுத்தினால் அதுவே கடவுள் தயவு எனலாம்" என்றான்.

வான்போர்க்:—ஆனால் இங்கிலாந்து தன் எதிர் கால க்ஷேமத்தைக் கவனிக்குமல்லவா?

வான் ஹேர்லிங்:—ஆ! அது முற்றும் வேறு விஷயம். இப்போது இங்கிலாந்தின் விஷயமாய் எதிர் காலத்தில் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டியது, என்ன செய்ய வேண்டியது என்பதைப்பற்றி திட்டமாய் ஆலோசனை செய்து ஏற்பாடுகளும் செய்துவிட்டிருக்கி

றோம். நீ கொடுக்கப்போகும் உளவுகள் எங்களுக்கு மிக்க முக்கியமானவைகளாகவும் அனுகூலமானவைகளாகவுமிருக்கும். இங்கிலாந்தின் சங்கதி இன்றேல், தவறின் நாளையோ நிச்சயம். இன்றைக்காயின் நாம் ஆயத்தமாகவே யிருக்கிறோம். இச்சமையம் நாளைக் கென்றால இதைவிட இன்னும் அதிக ஆயத்தமாக விருப்போம். என் புத்திக்குப் புலப்படுவதென்னவெனில் இவர்கள் கூட்டாளிகளோடு சேர்ந்து யுத்தம் புரிவதே நலம். அது அவர்கள் விஷயம். இருக்கட்டும் நீ யேதோ பத்திரங்களைப்பற்றி கூறினுயே" என்றான்.

2-வது அத்தியாயம்.

வான் ஹெர்லிங் மேற்கண்டவாறு கூறும்போது ஒரு பெரிய நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தான். அங்கிருந்ததீபம் அவன் நெற்றியில் கண்ணாடி போல் பிரகாசித்தது. அவனும் வான்போர்கும் உட்கார்ந்திருந்த அறையின் சுவர்களில் பலகை தைக்கப்பட் டிருந்தது. அதன் ஒரு மூலையில் திரை விடப்பட்டிருந்தது. வான் போர்க் அத்திரையை நீக்கியபோது அம் மூலையில் பித்தளைக் கட்டுகள் போட்ட ஒரு இரும்புப்பெட்டி யிருந்தது. வான் போர்க் தன் கடிகாரச் சங்கிலியில் மாட்டிக் கொண்டிருந்த ஒரு சிறிய சாவியை யெடுத்து அப்பெட்டியைச் சற்று நேரம் கஷ்டப்பட்டுத் திறந்தான்.

பெட்டியின் கதவைத் திறந்து விட்டு வான் ஹெர்லிங்கை நோக்கி, நண்பனே! இதோபாரும் என்றான். அங்கிருந்த தீபத்தின் பிரகாசம் பெட்டியில் நன்றாகத் தாக்கியது. ஹர்லிங் அதனருகிற் சென்று அதை

நன்குக உற்று நோக்கினன். அதில் வரிசையாகப் புறாக் கூண்டுபோல் பல அறைகள் இருந்தன. ஒவ்வொரு அறையின் மேலும் சீட்டு ஒட்டப்பட்டிருந்தது. அச்சீட்டு களில் சுருக்கமாய் அந்த அறையில் எந்த விஷயத்தைப் பற்றிய கடிதங்கள் இருக்கின்றனவென்று குறிப்பிடப்பட் டிருந்தது. அந்த அறைகள் ஒவ்வொன்றிலும் நிறையக் கடிதங்கள் கட்டுக் கட்டாக சொருகப்பட் டிருந்தன. ஹொர்லிங் வியப்போடு அவற்றை உற்று நோக்கினன். அச் சீட்டுகளில் கோட்டையின் பெயர்களும், யுத்தக் கப்பல் களின் பெயர்களும், குறிக்கப்பட் டிருந்ததோடு, ஆகாய விமானங்கள், நீர் மூழ்கிக் கப்பல்கள், கலகம், இஜிப்ட், ப்ளிமத், இந்தியா, அயர்லாந்து, துறைமுகப் பாதுகாப்பு கள்..........என்று வரையப்பட் டிருந்தன.

இவை யாவும் கண்ட ஹொர்லிங் "ஆ! அபாரமான விஷயங்கள்" என்று கூறிக்கொண்டே வாயிலிருந்த சுருட் டையெடுத்துக் கீழே வைத்து விட்டுத் தன் கடித்த காங் களைத் தேய்த்துக்கொண்டு தட்டினன். பிறகு வான் போர்கை நோக்கி "ஆ! இவ்வளவு அரியகாரியங்களும் இந்த நான்கு வருடங்களில் செய்யப்பட் டிருக்கின்றன. சாதா ரணமாய் வேட்டை யாடிக்கொண்டும் பந்து குதிரை பந் தயம் முதலிய விளையாட்டுகளில் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்த ஒரு ஆள் இவ்வளவு காரியங்களைச் செய் வது மிக்க அபூர்வமே." என்ருன்.

வான்போர்க்:—"ஆயினும் நான் சேகாம் செய்திருப்பவற் றில் சிரோதனம் போன்றது இன்னும் வரவில்லை. அதற்கு இடம் முதலியயாவும் ஆயத்தம் செய்யப்பட் டிருக்கிறது. இதோ பார்!" என்ருன்.

வான்ஹெர்லிங் அந்த அறையை நோக்கினன். அது ஒரு காலியறை. அதன்மேல் "கடற்படை சமிக்கைகள்" என்று எழுதப்பட்டிருந்தது. அவன் போர்கை நோக்கி "அதோ அந்த அறையிற் கூட "கடற்படை சமிக்கைகள்" என்று எழுதப்பட் டிருக்கிறது, முன்னமே அதிலும் கடிதங்கள் சேகரித்து வைக்கப்பட் டிருக்கின்றனவே" என்றான்.

வான்போர்க்:—"ஆ! அவை புராதனமாய் விட்டன. இவர்கள் எப்படியோ இதைப்பற்றி சந்தேகம் கொண்டு எல்லா சமிக்கைகளையும் அடியோடு மாற்றி விட்டார்கள். இது ஒரு பெரிய துரதிஷ்டம். என் விவகாரங்கள் முழுமையிலும் இது ஒரு பெரிய இடையூறு. ஆயினும் கடவுள் தயவால் ரொக்கமும் ஆல்டமான்ட் (ஒரு ஆங்கிலவன்) என்பவனும் இருக்கிற வரையில் இந்த இரவே யிதையும் நிரப்பி விடுவேன்" என்றான்.

ஹெர்லிங் தன் கடிகாரத்தை யெடுத்துப் பார்த்து ஆத்திரமான சத்தமிட்டு, "ஆ! நான் இன்னும் காத்திருக்க முடியாது. சார்ல்டன் மாளிகையில் (இங்கிலீஷ் இராசாங்க மந்திரிகள் மந்திராலோசனைச் சபை) விசேஷ சம்பவங்கள் நடை பெறுகின்றன. நான் தூர இருந்துவிட லாகாது. நாமனைவரும் அவரவர்களிடத்திலிருக்க வேண்டும். உன் பெரிய வேட்டையைப் பற்றிய சங்கதியைக் கொண்டு போவேன் என்ற நம்பிக்கையோடு வந்தேன். ஆல்டமான்ட் இன்ன வேளைக்கு வருகிறேன் என்று அறிவிக்கவில்லையோ?" என்று வினவினன்.

வான்போர்க் உடனே தன்னிடமிருந்த ஒரு தந்தியை யெடுத்து ஹெர்லிங்கிடம் கொடுத்தான். அது ஆல்டமான்ட் என்பவனனுப்பியது, அதில், "கட்டாயம் தவறு

மல் இராத்திரிக்கு வருகிறேன். புது மரையாப்புகள் கொண்டு வருகிறேன். ஆல்டமான்ட்" என்றிருந்தது.

மரையாப்பு என்ற வார்த்தையைக் கண்ட ஹெர்லிங் வியப்போடு "இதென்ன? இதென்ன ? மரையாப்பு ஏன் ?" என்றான்.

வான்போர்க் :—ஆல்டமான்ட் மோடார் வண்டிகள் பழுது பார்க்கிற வேலையை மேலுக்குச் செய்துகொண் டிருக்கிறான். நானும் மோடார் வண்டிகள் சாமான்கள் வைத்துக்கொண் டிருக்கிறேன். எங்களுக்குள் இரகசியமாயக் கூறவேண்டியவைகளுக்கெல்லாம் மோடார் வண்டியைச் சேர்ந்த சாமான்களில் ஒவ்வொன்றின் பெயரை வைத்துக்கொண் டிருக்கிறோம். எண்ணெய்க் குப்பி என்றால் குருஸர் கப்பல், ரேடியேடர் என்றால் பெரிய யுத்தக்கப்பல், மரையாப்பு என்றால் கடற்படை குறிப்பு வார்த்தைகள், இப்படியே ஒவ்வொன்றுக்கும் ஒரு பெயர் வைத்துக்கொண்டோம்" என்றான்.

ஹெர்லிங் அத்தந்தியின் மேல் பாகத்தை யுற்று நோக்கி "போர்ட்ஸ்மௌத் - நடுப்பகல்" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு "ஆ! இந்த ஆலட்மான்டுக்கு எவ்வளவு தொகை கொடுப்பதாக ஒப்பந்தம் ?" என்று கேட்டான்.

வான்போர்க்:—இந்த ஒரு விஷயத்திற்கு மட்டும் ஐந்நூறு பவுன். இதோடு அவனுக்குச் சம்பளம் வேறு இருக்கவே யிருக்கிறது.

ஹெர்லிங்:—போசைக்காரக் கள்ளப்பயல்கள் : ஆனால் அன்னியரிடம் இத்தகைய துரோகிகளிருப்பது நமக்கு மிக்க பிரயோசனமே. ஆயினும் இந்தப் பெருந்

தொகையே யெனக்குப் பொறுமையை யுண்டாக்கு கிறது.

வான்போர்க்:—ஆல்டமான்ட் விஷயத்தில் நான் எதிலும் பின்னிடைகிறதில்லே. நான் அவனுக்குத் தாராளமாய்ப் பணம் கொடுத்தால் அவனும் அவன் பேசும் பரிபாஷைப்படி, சரக்குகளைத் தவணைப்படி கொண்டு வந்து சேர்த்துவிடுகிருன். அதுவுமன்றி இன்னென்று கூறுகிறேன். அவன் துரோகியல்ல-இல்லேயில்லே-அமெரிகாவிலுள்ள ஐரிஷ்காரர்களுக்கெல்லாம் எப்படி இங்கிலாந்தின் விஷயத்தில் வஞ்சமும் பொறுமையு மிருக்கிறதோ அவ்வாறே ஆல்டமான்டுக்கும் இருக்கிறது. இவன் நம்மிடம் விசுவாசமுடையவன். உண்மையே நான் கூறுவது.

ஹோர்லிங்:—ஓ இவன் அமெரிக ஐரிஷ்காரனே?

போர்க்:—அவன் பேசும்போது மட்டும் நீ கேட்டுக்கொண்டிருந்தால் ஒரு போதும் சந்தேகங்கொள்ளவே மாட்டாய். ஒவ்வொரு சமயத்தில் அவன் கூறுவது எனக்கே விளங்குவதில்லே. அவன் இங்கிலீஷ்காரரோடும் இங்கிலாந்து அரசரோடும் யுத்தம் செய்யத் தீர்மானித்திருப்பவன் போல் தோன்றுகிறது. நீ உண்மையாகவே சீக்கிரம் திரும்பிவிட வேண்டுமோ? அவன் எந்த விநாடியில் வந்துவிட்டாலும் வந்துவிடுவான். ஒவ்வொரு விநாடியும் அவனே யெதிர்பார்க்கிறேன்.

ஹோர்லிங்:—"இல்லே யில்லே. நான் மிக்க விசனிக்கிறேன். ஆனல் உண்மையில் நான் இதுகாறுமே அளவு மீறிய காலம் இங்கு இருந்து விட்டேன். நாளே காலேயில் உன்னே யெதிர்பார்க்கிறேன். நீ படிக்கட்டுகளருகிலுள்ள சிறிய கதவின் வழியாக இந்த கடந்

படை குறிப்பு வார்த்தைகளடங்கிய புத்தகத்தை மட்டும் கொண்டுவந்து கொடுத்துவிட்டாயோ நீ இங்கிலாந்தில் செய்த காரியங்களுக்கெல்லாம் அது ஜெயக்கொடி நாட்டியது போலாகும்" என்று கூறிவிட்டு அங்கு ஒரு அலமாரியிலிருந்த ஒரு பெரிய புட்டியையும் அதன் பக்கத்திலிருந்த இரண்டு கண்ணாடிப் பாத்திரங்களையும் காத்தால் சுட்டிக்காட்டி "ஓகோ டோகேயா?" என்ருன் (டோகே என்பது ஒருவித மதுபானம்).

போர்க்:—"என் வந்த ஆயாசம் தீர இரண்டு கிண்ணம் அருந்தலாமே" என்ருன்.

ஹோர்லிங்:—வந்தனம் வேண்டாம் வேண்டாம். இது இங்கிருப்பது கேளிக்கை செய்யும் இடம் என்று குறிப்பிடுவது போல் காண்கிறது என்பதற்காகக் கூறினேன்.

வான்போர்க்:—"ஆல்டமான்ட் ஒயின்களின்மேல் பிரியமுள்ளவன். இந்த டோக்கே ஒயினில் அவனுக்குமிக்க பிரியம். சில்லரை விஷயங்களில் அவனை உற்சாகப் படுத்தித் தட்டிக்கொடுக்கவேண்டி யிருக்கிறது. நான் அவன் மாதிரிகளை யெல்லாம் சரியாக அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது" என்ருன்.

அதன்பின் இருவரும் புறப்பட்டு வெளியில் சென்று மெதுவாயுலவிக்கொண்டே ஹெர்லிங் பிரபுவின் வண்டி நிற்குமிடத்தை நோக்கிச்சென்ருர்கள். ஹெர்லிங் தூரத்தில் பிரகாசிக்கும் தீபங்களைச் சுட்டிக்காட்டி, தன்மேல் அங்கியை மாட்டிக்கொண்டு, "அதோ தெரிகிற தீபங்கள் ஹார்விச் நகரத் தீபங்கள் என்று கருதுகிறேன். இவையாவும் எவ்வளவு சமாதானமாகவும் நிம்மதியாகவும் புலப்படுகின்றன பார்த்தாயா. இந்த வாரம் முடிவதற்குள் வேறு தீபங்களும்

தோன்றும் - அப்போது இங்கிலாந்தின் கடற்கரையில் சமாதானத் தோற்றம் குறைந்துவிடும். நமது நேர்த்தியான ஸெப்ளின் (ஆகாயவிமானம்) நாம் நம்பியிருக்கிறபடி நடந்து கொண்டால் இப்போது இங்கு வானத்தில் தோன்றும் சமாதானம் கூட இப்படித் திருப்தியாயிராது" என்று கூறி விட்டு "ஆ அது யார்?" என்றான்.

போர்க் வசிக்கும் இடத்தில் ஒரு அறையில் ஒரு சாளரம் திறந்திருந்தது. தீபம் எரிந்துகொண்டிருந்தது. அந்த அறையில் ஒரு மேஜை யெதிரில் ஒரு வயது முதிர்ந்த மாது உட்கார்ந்துகொண்டு ஏதோ பின்னல்வேலை செய்துகொண்டும் இடை இடையில் அருகிலிருந்த ஒரு கறுப்பு நாயைத் தடவிக்கொடுத்துக்கொண்டு மிருந்தாள். அவளையே வான் ஹெர்லிங் சுட்டிக்காட்டி அது யார் என்று போர்கைக்கேட்டான். போர்க், "இவள் ஒருத்தியைமட்டுமே வேலைக்கு வைத்துக்கொண் டிருக்கிறேன்" என்றான்.

வான்ஹெர்லிங் சந்தோஷமாய்ச் சத்தமிட்டு, "பேஷ் இவள் இங்கிலாந்தின் பிரதிநிதியாய் இருக்கிறாள். பேஷ்! நான் போய்வருகிறேன்" என்று கூறியதும் தன் மோடார் வண்டியில் ஏறிக்கொண்டு சென்றான். சற்று நேரத்திற்குள் வண்டியின் இராந்தல் வெளிச்சம் கண்களுக்கு மறைந்து விட்டது.

ஹெர்லிங் தன் வண்டியிலுள்ள மிருதுவான மெத்தை மேல் சாய்ந்துகொண்டான். அவனுடைய எண்ணம் முழுமையும் நேரிடப்போகும் ஐரோபா யுத்தத்தின் மேலிருந்தது. அச்சமயம் அவன் மனதிலிருந்த சந்தோஷமான சிந்தனையால் தன் வண்டி கிராமத்தின் சந்தைவிட்டுத் திரும்பும்போது எதிரிலிருந்து ஒரு சிறிய மோட்டார் வண்டி வந்ததை யவன் கவனிக்கவில்லை.

வான்போர்க் தன் நண்பன்வண்டி கண்களுக்கு மறைந்ததும் மெதுவாய் நடந்து வீட்டிற்குள் சென்றான். அதற்குள் மார்தா என்ற வேலைக்காரி தீபத்தை யணைத்துவிட்டுச் சயனத்திற்குப் போய்விட்டாள். தன் வீட்டை இந்த நிலைமையில் காண்பது போர்குக்குப்புது சம்பவம். ஏனெனில் அவன் குடும்பம் பெரிது. அனேகம் வேலைக்காரர்கள் இருந்தார்கள். இப்போது அந்த ஒரு வேலைக்காரி தவிர தான் ஒருவனே அந்த வீடு முழுமைக்கும் இருப்பவன். அவன் தன் அறையில் செய்யவேண்டிய வேலை அதிகமாக விருந்தது. தன் குடும்ப முழுமையும் க்ஷேமமான இடத்திற்குப் போய் விட்டது அவனுக்கு மிக்க மனோ நிம்மதி.

வான்போர்க் இருக்கும் அறையில் அனுவசியமானவைகளையும் பிறரிடம் அகப்படக் கூடாத இரகசியங்களையும் அழித்து ஒழித்துச் சுத்தி செய்ய வேண்டிய வேலை யதிகமாக விருந்தது. ஆகையால் இப்போது உள்ளே சென்றதும் அவன் அந்த வேலையில் சுறுசுறுப்பாய் இறங்கினான். அவன் அனேக கடிதங்களைத் தீயிலிட்டு அவை யெரிவதைக் கண்டதும் அவன் முகத்தில் ஒரு விதப் பிரகாசம் உண்டாகியது. அவனுடைய மேஜையின் பக்கத்தில் ஒரு தோற்பை வைக்கப்பட்டிருந்தது. தன் இரும்புப் பெட்டியிலிருந்த மிக்க அருமையான இரகசியங்களடங்கிய கடிதங்களை யெல்லாம் எடுத்து அத்தோற்பையில் கிரமமாகவும் மிக்க ஒழுங்காகவும் அடுக்கி வைக்கத் தொடங்கினான்.

அவன் இந்த வேலையிற் றொடங்கிய சற்று நேரத்திற்குள் அவனுடைய சூக்ஷுமமான செவிப்புலனுக்கு தூரத்தில் ஒரு மோட்டார் வண்டி வரும் சத்தம் கேட்டது. அதைக் கேட்டதும் சட்டென்று தோற்பையை மூடிக் கட்டிவிட்டு, இரும்புப் பெட்டியைப் பூட்டிக் கொண்டு தாழ்வாரத்திற்குச் சென்றான். அப்போது தான் வீட்டெதிரில்

வந்து நிற்கும் ஒரு வண்டியின் பிரகாசம் பொருந்திய தீபங்கள் அவன் கண்களுக்குப் புலப்பட்டன. வண்டி நின்றதும் அதில் உட்கார்ந்திருந்த மனிதன் வெளியிலிறங்கி துரிதமாய் இவனை நோக்கி வந்தான். வண்டியை யோட்டிக் கொண்டு வந்த வயது முதிர்ந்த தடித்த உருவமும் சற்று நரைத்த மீசையுமுடைய மனிதன் வண்டி திரும்பச் சற்று நேரம் செல்லு மென் றறிந்தவன் போல் நிம்மதியாய்த் தன் ஆசனத்தில் சாய்ந்து கொண்டான்.

வான்போர்க் தன்னிடம் வரும் மனிதனைச் சந்தோஷத்தோடும் ஆவலோடும் எதிர் சென்றழைத்து நல்லதாயிற்று என்றான்.

அதற்கு விடையாக வந்தமனிதன் (ஆல்டமான்ட்) தன்னிடமிருந்த ஒரு சிறு சிப்பத்தை ஜெயமடைந்தவன் போல சந்தோஷத்தோடு உயரத்தூக்கிக் காட்டி, "இன்று நீர் எனக்குச் சந்தோஷமாகக் கைநீட்டவேண்டும். நான் கடைசியில் சாக்கைக் கொண்டுவந்து வீடு சேர்த்து விட்டேன்" என்றான்.

போர்க்:—"இரகசிய சமிக்கைகள் தானே?" என்று போாவலோடு கேட்டான்.

ஆல்டமான்ட்:—"ஆம் என் தந்தியில் கூறிய அவைகளே. எல்லாம் கொடிக்குறி, தீபக்குறி கைக்குறி யாவும்-ஆனால் அசலல்ல நினைவிருக்கட்டும், அசலைக் கொண்டு வருவது எப்போதும் பெரிய ஆபத்து. ஆனால் அசல் சாக்கே-அதைப்பற்றி பூரணமாய் நம்பலாகும்" என்று கூறிக்கொண்டே வான்போர்கினுடைய தோள்பட்டைமேல் சிநேக பாவமாய்த் தட்டினான்.

பிரபுவாகிய தன்னைச் சாதாரண மனிதன் சம அந்தஸ்துடையவன் போல் கருதி அவ்வாறு தட்டியதும் போர்க்

முகம் சுளித்தது. அவன் அதை யுடனே மறைத்துக் கொண்டு "வா உள்ளே செல்வோம், செல்வோம்" என்றான்.

3-வது அத்தியாயம்.

ஆல்டமான்ட் தன் சாரதியைக் கைகாட்டி யழைத் துக்கொண்டு வான்போர்க் பின்னுற் சென்றான். சற்று நேரத்திற்குள் போர்கும் அவர்களும் அவன் அறையில் சென்று உட்கார்ந்தார்கள். ஆல்டமான்ட் அங்கிருந்த பெரிய நாற்காலியில் உட்கார்ந்து கால்களை நீட்டிக்கொண் டான். அவன் உயரமும் பலமுமுடையவன். வயது அறு பதிருக்கும் போல் தோன்றியது. பிரகாசம் பொருந்திய முகமும், கூர்மையானதும் எதிரிலுள்ளோர் மனதை யூடுருவிப் பார்க்கக்கூடிய பார்வையும் உடையவன். ஒரு விதமான குட்டைத் தாடியும் செழித்து வளர்ந்த மீசையுமுடைய வன். அவன் வாயில் பாதி பிடித்தணைந்து போயிருந்த சுருட்டிருந்தது. அங்கு உட்கார்ந்ததும் அவன் ஒரு தீக் குச்சியைக் கிழித்து அச்சுருட்டை மறுபடி பிடிக்கத் தொடங்கினான். சாரதி எட்டவிருந்த மேஜையினருகிலுட் கார்ந்தான்.

ஆல்டமான்ட் அறையில் கீழே யிருந்த தோல் பையை யும், இரும்புப் பெட்டியின் முன் இருக்கும் திரை நீக்கப்பட் டிருப்பதையும் நெகிடித் தீயில் கடிதங்கள் கொளுத்தப்பட் டிருப்பதையும், யாவும் குறிப்பாய்ப் பார்த்ததும், வான் போர்கை நோக்கி,

"ஓ! எஜமான் பிரயாணத்திற்கு ஆயத்தம் செய்கிறது போற் காண்கிறது. உமது கடிதங்களை யெல்லாம் இந்தப் பெட்டியில் வைக்கிறதில்லை யென்று கருதுகிறேன்" என்றான்.

போர்க் :—என் வைக்கக்கூடாது ?

ஆல்டமான்ட் மிக்க பீதியும் வியப்பு மடைந்து "அடடா! இந்த வெளிப்படையான இத்தகைய பெட்டியிலா! இங்குள்ளவர்கள் உம்மை யொரு உளவாளியாகவே யெண்ணி யிருக்கிறார்கள். எவனாவது ஒருவன் தாராளமாக உள்ளே வந்து ஏதேனும் ஒரு ஆயுதத்தால் இதில் கை வைத்து விடுவானே. என் கடிதங்களில் ஏதேனுமொன்று இத்தகைய திறந்படியான பெட்டியில் வைக்கப்படும் என்று எனக்குத் தெரிந்திருந்தால் நான் உமக்குக் கடிதம் எழுதப் பெரிய முட்டாளாக வல்லவோ இருக்கவேண்டும்." என்றான்.

போர்க்:—எந்தக் கள்ளனும் இப்பெட்டியைத் திறப்பதெனின் அது ஆகிறகாரியமல்ல. எந்த ஆயுதத்தாலும் பெட்டியைப் பிளக்க முடியாது.

ஆல்டமான்ட்:—பெட்டியை யேன் பிளக்கவேண்டும். பூட்டைத் திறந்தாலாயிற்று.

போர்க்:—இப்பூட்டு இரண்டு உளவுகளை யுடையது. ஒன்று பெயர்; மற்றொன்று ஒரு எண்.

ஆல்டமான்ட்:—ஆ! இரட்டை உளவா?

போர்க் எழுந்து பெட்டியருகிற் சென்று "இதே பூட்டைச் சுற்றி ஒரு உள்வளைய மிருக்கிற தல்லவா? இதிலுள்ள எழுத்துகளை வரிசையா யமைத்துக் குறித்த பெயர் வரும்படி செய்யவேண்டும் என்றான். இது நீ முதலில் எண்ணியதுபோல் அவ்வளவு சுலபமான பெட்டி யல்ல வென்று இப்போது நினைப்பா யென்று கருதுகிறேன். இருக்கட்டும். நான் நான்கு வருடங்கட்கு முன் பிரத்தியேகமான கட்டளை யனுப்பி இப்பெட்டியைச் செய்ய வைத்தேன். பெயர் என்ன வைக்க ஏற்பாடு சேய்தேன் என்பதை உத்தேசித்துக் கூறு பார்ப்போம்" என்றான்.

ஆல்டமான்ட்:—"ஆ! அது என்னால் முடியாது" என்றான்.

போர்க் :—இரண்டாவது என்ன எண் வைக்கச் சொன்னேன் தெரியுமா?

ஆல்டமான்ட்:—என்னால் முடியாது.

போர்க் :—"நல்லது நான் கூறுகிறேன் கேள். பெயர் 'ஆகஸ்ட்.' எண் '1914' என்றான்.

அம்மொழிகளைக் கேட்ட ஆல்டமான்ட் மிக்க வியப்பும் போர்கைப் பற்றி மகிழ்ச்சியுமடைந்து அவனை நோக்கி, "உண்மையில் இது மிக்க அற்புதமே. நீ வருடம் மாதம் முதற்கொண்டு திட்டமாய்க் குறித்து விட்டிருப்பது மிக்க அதிசயக் காட்சியே" என்றான்.

வான்போர்க்:—"நீ கூறுவதுண்மையே. எங்களில் சிலர் மட்டும் அப்போதே தேதியைக் கூடக் குறித்துக் கொண்டோம். இதோ அது இருக்கிறது. நான் நாளைக் காலை வீட்டை மூடிவிட்டுப் போகப்போகிறேன்" என்றான்.

ஆல்டமான்ட்:—அப்படியாயின், என்னைக் கூட நீர் பிரயாணங் கூட்டிவிட வேண்டும் என்று கருதுகிறேன். நான் இந்த அக்கிரம நாட்டில் இன்னும் தனியாயிருக்க முடியாது. இன்றிருந்து இன்னும் ஒருவாரத்திலோ அதற்குள்ளாகவோ ஜான் புல் (இங்கிலாந்து) தன் பின் கால்கள் மேல் நின்று தத்தளிப்பான். அப்போது நான் கடலுக்கு அக்கரையிலிருந்து வேடிக்கை பார்ப்பதே நலம் என்று கருதுகிறேன்.

இதனால் இதை வாசிப்போர் ஜர்மானியர் இங்கிலாந்தைப்பற்றி எத்தகைய கெட்ட எண்ணங் கொண்டார்களென்பது நன்கு விளங்கும். "கெடுவான் கேடு நினைப்பான்" என்ற வேதவாக்கு இவ்விஷயத்தில் சரியாய் நிரூபணமாய் விட்டது உலகமறிந்த விஷயம். எவரேயாயி

னும் சரி. "நாமே யாவரிலும் மேலாயிருக்கவேண்டும் மற்ற பேர் நமக்குக் கீழ்ப்படிந்து தாழ்ந்த அந்தஸ்திலிருக்க வேண்டும். நாமே ஆண்டான் பதவியிலிருக்க வேண்டும்; மற்ற பேர் அடிமைப் பதவியிலிருக்கவேண்டும்; நமக்கிருக்கும் மிருக வல்லமையால் நாம் யாவரையும் அடக்கிவிடலாம். வல்லமையே நீதி" என்று எண்ணங்கொண்டு நடப்பவர்கள் ஒருபோதும் முன்னுக்கு வரமாட்டார்கள். சாதாரண மனிதர்களை விடவும் அரசர்களில் மெய்ஞ்ஞானக் கல்வியில்லார்க்கு அதிக பேராசை யுண்டு. அளவு கடந்த பேராசையும், தானே பலவான் என்ற அகங்காரமும் எப்போது ஒரு அரசனிடமோ, ஒரு ஜன சமூகத்தினிடமோ, ஒரு மனிதனிடமே சேருகின்றனவோ அப்போதே யவர்களின் அழிவிற்கு இலக்கு பகவானால் வைக்கப்பட்டதென்பது சத்தியம். இதற்கெல்லாம் ஜர்மெனியே முதற்றரமான அத்தாட்சியாகும். இனிக் கதையைத் தொடங்குவோம்.

ஆல்டமான்ட் அவ்வாறு கூறியதே, வான்போர்க் "நீயொரு அமெரிக்கக் குடியாயிற்றே. உனக்கெப்படி இவர்கள் கெடுதி செய்வார்கள்?" என்றான்.

ஆல்டமான்ட்:—ஒகோ ஜாக்ஜேம்ஸ் கூட என்போல் ஒரு அமெரிக்க குடிதான். இப்போதவன் போர்ட்லாண்டு சிறைச்சாலையில் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறான். பிரிடிஷ் போலீஸ்காரரிடம் நான் அமெரிக்கன் என்று கூறுவதில் ஒரு பயனுமில்லை. அவர்களுக்கு எல்லாம் ஒன்றே. பிடிக்கவரும் போலீஸ்காரன் 'இங்கே யிருக்கும் சட்டம் அப்படி யிருக்கிறது நான் என்ன செய்வது?' என்கிறான். ஆ! ஜாக்ஜேம்ஸைக் கருதும்போது நீர் உமது ஆட்களைக்காப்பாற்ற ஒரு முயற்சியு மெடுத்துக் கொள்வதில்லை யென்று தோன்றுகிறது.

ஜாக்ஜேம்ஸ் என்பவன் வான்போர்க்குக் கூலிக்கு உளவு சம்பாதித்து வந்து கொடுக்கும் ஆட்களில் ஒருவன்.

ஆல்டமான்ட் அவ்வாறு கேட்டதே வான்போர்க் தட்டென்று "என்ன நீ கூறுவதன் அர்த்தம்?" என்றான்.

ஆல்டமான்ட்:—"நல்லது! நீர்தானே அவர்களை வேலைக் கமர்த்திக்கொண் டிருக்கிறீர். அவர்கள் உமக்காகத் தானே ஆபத்தில் நுழைந்து வேலைசெய்கிறார்கள்? அவர்களுக்கு ஆபத்து நேரும்போது-உமக்காக வேலைசெய்து அவர்கள் ஆபத்தில் சிக்கிக்கொண்டபோது அவர்களைக் காப்பாற்ற வேண்டியது உமது கடமை யல்லவா? அதோ ஜாக்ஜேம்ஸ் சிக்கிக்கொண் டிருக்கிறான்..." என்பதற்குள்,

வான்போர்க்:—ஜாக்ஜேம்ஸ் தன்னால் தான் கெட்டால் அண்ணாவியென் செய்வான்? அவன் நாம் சொல்வதை விட்டு விட்டு தான்றோன்றித் தம்பிரானாய் நடக்கிறான். இந்த விஷயம் உனக்கும் தெரிந்ததே.

ஆல்டமான்ட்:—அவன் மூளைக் குறைவானவன்றான். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். அவன் போகட்டும் உமக்கு இவ்விஷத்தில் ஊழியம் செய்த-உண்மையாய் ஊழியம் செய்த ஹாலிஸ்?

போர்க்:—ஓ! அவன் சுத்தப் பைத்தியக்காரன்.

ஆல்டமான்ட்:—"சரி. அவன் கடைசி சமயத்தில் புத்தி சபலித்த மாதிரி நடந்துகொண்டான். ஒரு மனிதன் காலை முதல் மாலை வரையில் மிக்க தந்திரமாய் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அபிநயம் செய்து கொண்டு இந்த நாட்டுப் போலீஸ்காரரிடம் தப்புவதென்றால் எவ்வளவு கஷ்டம். இப்போது கடைசியில் அவன் போய் சிக்கிக்கொண்டான். அவனும் போகட்டும். ஸ்டீனர்......" என்றதே,

வான்போர்க் திடுக்கிட்டு விட்டான் - அவன் முகம் வெளுத்துவிட்டது. "அய்யோ! ஸ்டீனரா? அவனைப்பற்றி யென்ன விசேஷம்? ஒன்றுமில்லையே" என்றான்.

ஆல்டமான்ட்:—ஒன்றுமில்லை. அவன் அகப்பட்டுக்கொண்டான்-கடந்த இரவு போலீஸார் அவன் வீட்டில் திடீலென்று நுழைந்து சோதனை செய்தார்கள். அவனிடம் அனேகம் கடிதங்கள் அகப்பட்டனவாம்-அவன் கடிதங்களுடன் இப்போது போர்ட்லாண்ட் சிறைச்சாலையிலிருக்கிறான். இப்போது நீர் பேசாமல் போய்விடப் போகிறீர். பாபம்! அப்பரிதாபமான மனிதன் பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறான். எப்படியேனும் அவன் பிராணன் தப்பினால் பெரும் புண்ணியமே. இதனால்தான் நான் உமது விவகாரம் எவ்வளவு சீக்கிரத்தில் முடிகிறதோ அவ்வளவு சீக்கிரத்தில் இந்நாட்டைவிட்டுக் கடலுக்கு அக்கரையில் போய்விடவேண்டுமென்று கருதுகிறேன்.

வான்போர்க் மிக்க மனோ தைரியமுடையமனிதன்; பயமற்றவன். ஆயினும் அவன் ஆல்டமான்ட் கடைசியில் கூறிய சங்கதியைக் கேட்டதே மனக்கலக்கமும் திகிலுமடைந்துவிட்டான். அவன் ஆல்டமான்டை நோக்கி மிக்க வியப்போடு, "அவர்கள் ஸ்டீனரை யெப்படிப் பிடித்துக் கொண்டார்கள்? எனக்கு நேர்ந்தவற்றில் இது பெரிய இடி" என்றான்.

ஆல்டமான்ட்:—அது பெரியதல்ல. அதனினும் பெரிய ஆபத்து ஒன்றிருக்கிறது. அதாவது இது வரையில் அவர்கள் என்னைத் தொடர்ந்து நெருங்கிவந்து விட்டிருப்பார்களென்று நினைக்கிறேன்.

இதைக்கேட்ட வான்போர்க் பின்னும் கலக்கமடைந்து "என்ன சங்கதி? கூறுவது உண்மையா?" என்றான்.

ஆல்டமான்ட் :—"உண்மையான சமாசாரம். என் வீட்டி லிருக்கும் காரியஸ்தியை விசாரித்திருக்கிறார்கள். அதை நான் அறிந்ததே ஒகோ இனி நாம் இங்கிருப்பது பிசகு. சீக்கிரம் நாமும் இதை விட்டுத் தாண்டிவிட வேண்டு மென்று எண்ணிக் கொண்டேன். எனக் கிருக்கும் ஆச்சரிய மென்னவெனில் - இச்சங்கதிகள் இந்த நாட்டுப் போலீஸாருக்கு எப்படித் தெரிந்தன ? நான் உம்மிடம் ஒப்பந்தம் செய்துகொண்ட பின் ஸ்டீ னரோடு ஐந்து பேர் பிடிக்கப்பட் டிருக்கிறார்கள். நான் சீக்கிரத்தில் இந்த நாட்டைவிட்டுத் தாண்டி விட்டால் ஆறுவதாக அகப்பட்டுக்கொள்ளும் ஆளின் பெயர் இன்னதென்று நான் திட்டமாகக் கூறுவேன்." என்றான்.

ஆல்டமான்ட் கூறியதைக்கேட்ட வான்போர்க் முன் னிலும் மிக்க மனக்கலக்க மடைந்து ஆல்டமான்டையுற்று நோக்கினான். ஆல்டமான்ட் "இப்போது நான் கூறிய இந்த உமது ஆட்களைப்பற்றிய விஷயத்திற்கு நீர் என்ன சமாதானங் கூறுகிறீர் ? இம்மாதிரி உமது ஆட்கள்-உமக்கு உளவறிந்துவந்து கூறுவதில் ஆபத்தில் - பெரும்பாலும் பிராணாபத்தில் சிக்கிக்கொண்டு அனாதாவாய் வருந்துவது உமக்கு அவமானமாக இல்லையா ?" என்றான்.

இம் மொழிகளைக் கேட்டதே வான்போர்குக்குக் கோபத்தால் முகம் சிவந்து விட்டது. அவன் உதடுகளும் மீசையும் துடித்தன. அவன் வேறு சமயமாயிருந்தால் அவ்வாறு கேட்டவனை யுடனே தண்டித் திருப்பான். இப் போது கஷ்டத்தோடு தன் கோபத்தை யடக்கிக் கொண்டு, "இவ்வளவு துணிகரத்தோடு என்னை யிம்மாதிரி கேட் கிறாயா ?" என்றான்.

ஆல்டமான்ட் :—"நான் துணிகரமாய் என் காரியங்களைச் செய்யா விட்டால் உம்மிடம் இத்தகைய வேலைசெய்ய ஒப்பிக்கொண் டிருக்க முடியாது. இவ்வளவு தூரத் திற்கு வந்த மட்டில் என் மனதிலிருப்பதை வெளிப் படையாய்க் கூறிவிடுகிறேன். ஜர்மென் இராஜ தந் திரிகளாகிய நீங்கள், உங்களுக்கு உளவு கொண்டுவந்து கொடுக்கும் ஆட்களால் உங்களுக்கு ஆகவேண்டிய காரியங்கள் முடிந்து விட்டால், அந்த ஆட்கள் ஆபத் தில் சிக்கிக் கொண்டாலும் சனி விட்டது என்று அவர் கள் விதிப்படி அவர்களை விட்டு விடுகிறீர்களென்று நான் கேள்விப்பட் டிருக்கிறேன். இதுவே யுண்மை. நான் வெளிப்படையாய்க் கூறி விட்டேன்" என்றான்.

வான் போர்க் இம்மொழிகளைக் கேட்டதும் பின்னும் மனக்கொதிப்படைந்து தேள் கொட்டியவன் போல் ஆச னத்திலிருந்து துள்ளி யெழுந்து,

"அப்படியானால் நீ கூறுவதின் அர்த்தமென்ன? நான் என் ஆட்களையே ஆபத்தில் சிக்கிக் கொள்ளும்படி காட்டிக் கொடுத்து விட்டே னென்று கூறுகிறாய்?" என்றான்.

ஆல்டமான்ட்:—"அதென்னமோ என்னால் கூறமுடியாது. எங்கோ ஒரு உளவு இருக்கிறது. இன்றேல் இப்படி ஒருவர் பின் னொருவராய் ஐந்து பேர் அகப்பட்டுக் கொள்ள வேண்டிய காரண மில்லை. அந்த மறை யெங் கிருக்கிறது என்று கண்டு பிடிக்க வேண்டியது உமது கடமை. அது எப்படியாயினும் போகட்டும். நான் இன்னும் இதில் தலையிட மாட்டேன். உடனே எவ் வளவு சீக்கிரத்தில் கூடுமோ அவ்வளவு சீக்கிரத்தில் நான் ஹாலண்டு தேசம் போய்ச் சேர்ந்துவிட வேண் டும். அவ்வளவே எனக்காக வேண்டியது" என்றான்.

வான்போர்க் தன் ஆத்திரத்தை யெல்லாம் அடக்கிக் கொண்டு "நாம் நெடு நாள் சினேகமாயிருந்தோம். இப் போது சச்சரவு செய்துகொள்ள லாகாது. நீ என்னிடம் நேர்த்தியான வேலைகள் செய்தாய். ஆபத்துக்களில் தலை யிட்டாய். அவற்றை யெல்லாம் நான் மறக்கலாகாது. நீ க்ஷேமமாய் ஹாலண்டுக்குச் செல். அங்குள்ள ரோட்டர் டாம் என்ற துறைமுகத்தில் கப்பலேறி நேராய் அமெரிக் காவின் தலை நகராகிய நியூயார்க்குக்குச் செல்லலாம். இன் னும் ஒருவாரம் கழிந்தால் அதைவிட க்ஷேமமான மார்க்கம் கிடைக்காது. இப்போது நீ கொண்டுவந்திருக்கும் புத்த கத்தைக் கொடுத்தால் மற்றவற்றோடு வைத்துக் கட்டி விடு கிறேன்" என்றான்.

ஆல்டமான்ட் தன்னிடமிருந்த சிப்பத்தைக் கையி லெடுத்து வைத்துக்கொண்டானே யொழிய போர்கிடம் கொடுக்கவில்லை. போர்கை நோக்கி, "தொகையைப்பற்றி யென்ன?" என்றான்.

போர்க்:—எதைப்பற்றி?

ஆல்டமான்ட்:—"ஏன்? இதற்காகக் கொடுக்கவேண்டிய ஐந்நூறு பவுன்? என் ஆள் இந்தவேலை மிக்க கஷ்ட மாக விருப்பதால் இன்னும் இருநூறு பவுன் அதிகம் கொடுத்தாலன்றி முடியவே முடியாது என்று கூறி விட்டான். அதைக் கொடுத்தபின்பே அவன் வேலை செய்தான். ஆகையால் தொகையைக் கொடுத்தால் தானே நான் இதைக் கொடுப்பேன்" என்றான்.

வான் போர்க் கொஞ்சம் மனக்கசப்போடு புன்னகை புரிந்து கொண்டே, "என்னிடம் உனக்கு உயர்வான மதிப் பில்லை போல் காண்கிறது. சாக்கைக் கொடுக்கு முன் பணத்தை யளிக்கவேண்டு மென்கிறாய்" என்றான்.

ஆல்டமான்ட்:—"இது போம் செய்ய வேண்டிய ஒழுங்கு தானே?" என்றான்.

போர்க்:—"சரிதான். உன் பிரியப்படியே யாகட்டும்." என்று கூறிவிட்டுத் தன் உண்டிப்புத்தகத்தை யெடுத்து எழுநூறு பவுண்டுக்கு ஒரு உண்டி யெழுதி அதை மேஜைமேல் ஒரு புறம் வைத்து விட்டு,

"நல்லது ஆல்டமான்ட்! நீ என்னை யவ்வளவு நம்பாத வரையில் நான் மட்டும் உன்னையேன் அதிகமாய் நம்பவேண்டும்? அதோ உண்டி யெழுதி வைத்திருக்கிறேன். நீ யதை யெடுத்துக்கொள்ளு முன், நான், நீ கொண்டுவந்திருக்கும் சாமான் சரியானதாவென்று அறிந்துகொள்ள வேண்டியது நியாயந்தானே?" என்றான்.

ஆல்டமான்ட் ஒன்றும் விடை கூறாமல் தன்னிட மிருந்த சிப்பத்தை வான்போர்ன் அருகிற்றள்ளினன். போர்க் அச்சிப்பத்தை யாவலோடெடுத்ததும் மேலே கட்டியிருந்த கயிற்றை யறுத்துப் புத்தகத்தின்மேல் சுற்றியிருந்த இரண்டு சுற்றுக் கடிதங்களையும் பிரித்தான். அப்புத்தகத்தின் மேல் பொன் எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்த வார்த்தைகளை வாசித்தான். அவை "தேனீக்களை வளர்க்கும் சிறந்த முறைகள்" என்று இருந்தன.

தான் எதிர்பார்த்த விஷயத்திற்கும் இப்புத்தகத்தின் மேலுள்ள விஷயத்திற்கும் ஒரு சம்பந்தமுமில்லை யென்றறிந்த வான்போர்க் சொல்லொணு வியப்படைந்து பிரமித்து உள்ளே யென்னதானிருக்கிறதென்று பார்ப்போம் என்று கருதி உள் பக்கத்தைத் திருப்ப முயன்றான். மறு விநாடி ஆல்டமான்ட் ஒரு பாய்ச்சலாய்ப் பாய்ந்து வான் போர்குடைய கழுத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு மயக்க மருந்து நனைத்த கடற்பஞ்சை யவன் முகத்தில் வைத்து அவன் சற்று மூர்ச்சை யடைந்ததும் கையும்

காலும் கட்டி அங்கிருந்த சோபாவில் அவனைக் கிடத்தினான்.

அதன் பின் ஆல்டமான்ட் என்று மாறு வேடமணிந்து கொண்டிருந்த ஷெர்லாக் ஹோம்ஸ் தன் கூட வந்திருக்கும் தன் நண்பனாகிய வாட்ஸனை நோக்கி "வாட்ஸன்! அதோ இருக்கும் டோகே புட்டியை யெடு; ஆளுக்கொரு கிண்ணம் அருந்தலாம்" என்றான். வாட்ஸன் அவ்வாறே எடுத்ததும் இருவரும் அருந்தினார்கள்.

அதன் பிறகு ஹோம்ஸ் இரும்புப் பெட்டியிலிருந்த கடிதங்களை ஒவ்வொன்று யெடுத்துப் பார்த்து வான்போர்குடைய தோற்பையில் வைத்தான். ஸோபாவின் மேல் இருந்த வான்போர்க் நித்திரை போய்விட்டான். ஹோம்ஸ் வாட்ஸனை நோக்கி "நாம் அவசரப்பட வேண்டியதில்லை. இங்கொருவரும் வரமாட்டார்கள். அந்த மணியையடி. இங்கு நமது மார்தாமட்டுமே யிருக்கிறாள். அவள் தன் பங்கு வேலையை மிக நேர்த்தியாய்ச் செய்தாள். நான் இந்த வேலையை யொப்புக்கொண்டதே அவளை யிங்கமர்த்தினேன்" என்றான்.

அதற்குள் வாட்ஸன் மணியடித்த சத்தத்தைக் கேட்ட மார்தாள் அங்கு வந்து புன்னகையோடு ஹோம்ஸுக்கு வந்தனமளித்து, மஞ்சத்தின் மேலிருந்த வான் போர்கைப் பார்த்ததும் சற்று கலக்கத்தோடு ஹோம்ஸை நோக்கினாள். ஹோம்ஸ் "ஒன்றும் பயமில்லை. எவ்விதத் துன்பமுமில்லை. இன்னும் சற்று நேரத்திற்குள் நித்திரையிலிருந்து விழித்துக்கொள்வான்" என்றான்.

மார்தா:—"அதற்காகச் சந்தோஷமடைகிறேன். ஏனெனில் என் வரையில் இவன் பட்சமுடைய எஜமானாகவே யிருந்து வந்தான். தன் மனைவி முதலியவர்களோடு என்னையும் ஜர்மெனிக்குச் செல்லும்படி கூறி

ளுன். நான் அப்படிச் செல்வது உன்னுடைய விவகாரங்களுக்குச் சரிப்படாதாதலால் நான் செல்லவில்லை" என்ருள்.

ஹோம்ஸ்:—போயிருக்கலாகாது தான். நீ இங்கிருக்கிற வரையில் என் மனது நிம்மதியாயிருக்கும். இன்று உன் சமிக்கைக்காகச் சற்று நேரம் காத்திருக்க நேர்ந்தது.

மார்தா:—அந்த வான் ஹெர்லிங்கால் ஆலசியமாயிற்று.

ஹோம்ஸ்:—தெரியும் தெரியும். வழியில் அவன் வண்டியைக் கண்டோம்.

மார்தா:—அவன் போகாமல் இங்கேயே நின்று விடுவானே என்று நான் பயந்திருந்தேன். உன் விவகாரங்களுக்கு அவனும் இங்கு இருப்பது இடையூருக விருக்குமல்லவா?

ஹோம்ஸ்:—"ஆம். ஆம். நாங்கள் உன் தீபத்தைப் பார்த்துக்கொண்டே அரைமணி நேரம் காத்திருந்தோம். சமயம் சரியாயில்லை, பெரும்பாலும் யாரோ வந்திருக்கிருர்கள் என்று தெரிந்துகொண்டோம். பிறகு நீ தீபத்தை யணைத்ததும் சரி இப்போது எல்லாம் சரியாக விருக்கிறது என்று தெரிந்துகொண்டு வந்தோம். நீ நாளைக்கு லண்டனிலுள்ள கிளாரிட்ஜ் ஹோட்டலுக்கு வந்து என்னைப்பார்" என்ருன்.

மார்தா:—அப்படியே செய்கிறேன்.

ஹோம்ஸ்:—நீயும் பிரயாணத்திற்கு ஆயத்தமாய் இருக்கிருயாக்கும்?

மார்தா:—"ஆம். இவன் ஏழு கடிதங்கள் தபாலுக்கனுப்பினுன். வழக்கம் போல் அவற்றின் மேல்விலாசங்களைக் குறித்து வைத்துக்கொண்டேன். இதோ" என்று ஒரு கடிதத்தை யவனிடமளித்தாள்.

ஹோம்ஸ்:—"நல்லதாயிற்று. இவற்றைச் சாவதானமாய்ப் பார்த்துக்கொள்கிறேன். இனி நீ போகலாம்" என்று கூறிவிட்டு அவள் கொடுத்த கடிதத்தை மடித்து ஜேபியில் வைத்துக்கொண்டான்.

மார்தா சென்றபின் ஹோம்ஸ் வாட்ஸனை நோக்கி "இப்பெட்டியிலிருக்கிற கடிதங்களெல்லாம் அவ்வளவாகப் பிரயோசனப்படத் தக்கவைகளாயிரா. இவற்றிலுள்ள சங்கதிகளெல்லாம் முன்னமே ஜர்மெனிக்கு அனுப்பப்பட்டிருக்கும். இவை அசல்கள்-இவற்றை நாட்டைவிட்டுக் கொண்டு போவது கஷ்டமான காரியம்" என்றான்.

வாட்ஸன்:—"அப்படியாயின் இவைகள் அடியோடு பயனற்றவைகளே" என்றான்.

ஹோம்ஸ்:—"அல்ல அல்ல, அப்படி நினைத்துவிடலாகாது. நம்மவர்கள் இவற்றைக் கண்டால் என்னென்ன விஷயங்கள் வெளியில் கொண்டு போகப்பட்டனவென்பதையாவ தறிந்துகொள்வார்கள். இவற்றில் பெரும்பாலானவை நான் அனுப்பியவைகள். அவைகளெல்லாம் சந்தேகமின்றி எள்ளளவும் நம்பத்தக்கவையல்லவென்று நான் கூறவேண்டியதில்லை. நான் நமது நீர்மூழ்கிக்கப்பல்கள் நடமாடாத இடமென்று குறிப்பிட்ட இடங்களில் ஜர்மென் கப்பல்கள் வருவதைக் கண்டால் மிக்க சந்தோஷமாயிருக்கும்" என்று கூறிவிட்டு எதையோ நினைத்துக்கொண்டவன் போல் தட்டென்று வாட்ஸன் தோளைப்பற்றி முகத்தைத் தீபத்திற்கெதிரில் திருப்பிப் பார்த்து, "இருட்டில் உன்னைச் சரியாகப் பார்க்கவில்லை. இடையில் கழிந்த இத்தனை வருடங்களில் உன் தேகத்தில் எவ்வளவு மாறுதலுண்டாயிற்றோ பார்ப்போம்" என்றான்.

வாட்ஸன்:—"ஹோம்ஸ்! உண்மையில் நான் இருபது வருடங்கள் குறைந்த வயதுடையவன் போல் உணர்கிறேன். வண்டியோடு ஹார்விச்சில் வந்து உன்னைச் சந்திக்கும்படி வந்த தந்தியைக் கண்டதே, நான் என் ஆயுளில் இதுகாறும் அடையாத சந்தோஷத்தை யடைந்தேன். ஆனால் நீ ஹோம்ஸ்! இந்த அகோரமான தாடி ஒன்று தவிர வேறெவ்வித மாறுதலு மடையக்காணோம்" என்றான்.

இங்கு விஷயம் நன்கு விளங்குவதற்காகச் சில சங்கதிகளைக் கூறிவிட்டுக் கதையைத் தொடங்குவாம்: ஷெர்லாக் ஹோம்ஸ் அனேககாலம் சுறு சுறுப்போடு துப்பறியும் தொழிலைச் செய்துகொண் டிருந்து கடைசியில் இங்கிலாந்தின் தென் கோடியில் கொஞ்சம் பூமியை வாங்கிக்கொண்டு விவசாயம் செய்துகொண்டு நிம்மதியாய்க் காலத்தைக் கழிக்கத் தீர்மானித்தான். இதனால் அவனும் வாட்ஸனும் சில வருடங்கள் சந்திக்கவே யில்லை. ஹோம்ஸ் அம்மாதிரி விவசாயம் செய்துகொண்டும் தேனீக்கள் வளர்த்துக்கொண்டு மிருக்கிறான் என்று மட்டும் வாட்ஸன் கேள்விப்பட் டிருக்கிறான். இவ்வாறிருக்கையில் ஒருநாள் ஹோம்ஸிடமிருந்து வாட்ஸனுக்கு ஒரு தந்தி வந்தது.

வாட்ஸன் அதை மிக்க ஆவலோடு பிரித்துப் பார்த்த போது அதில், "தயவுசெய்து இன்றிரவு மோடாரோடு ஹார்விச் ஸ்டேஷனில் என்னைச் சந்தி" என்று இருந்தது. அதைக் கண்டதே வாட்ஸன் சொல்லொணாத மகிழ்ச்சி யடைந்ததோடு ஹோம்ஸ் மறுபடி என்ன காரணத்தாலோ தன் பழையதொழிலில் பிரவேசித்திருக்கிறான் என்றும் அவன் புத்தியிற்றோன்றியது. இருவரும் சந்தித்ததும் உடனே புறப்பட்டு வான்போர்க் வீட்டை நோக்கி வந்து விட்டார்கள். ஹோம்ஸே எதையும் கூறுமுன் வாட்ஸன்

அவனை வலியக்கேட்கும் வழக்கமில்லை. ஆதலின் இன்னும் இருவரும் கலந்து பேசவில்லை. இனி கதையைத் தொடங்குவோம்.

4-வது அத்தியாயம்.

வாட்ஸன் "உன் கோரமான தாடியைவிட வேறு மாறுதல் உன் உருவத்தில் காணப்படவில்லை" என்று கூறியதே, ஹோம்ஸ் "வாட்ஸன்! ஒருவன் தன்தாய் நாட்டிற்காக இத்தகைய தியாகங்கள் செய்யவேண்டியிருக்கிறது" என்று கூறிக்கொண்டே "சிறிய தாடியைப் பிய்த்தெறிந்து விட்டு, நாளைக்கு இது பயங்கரமான கனவாய்த் தோன்றும். தலைமயிரைக் கொஞ்சம் கத்தரித்துக் கொண்டு இன்னும் இரண்டு சொல்ப மாறுதல்களைச் செய்து கொண்டால் என் சுய உருவத்தோடு நாளைக்கு ஹோட்டலில் பிரவேசிப்பேன். இந்த விஷயம் வருமுன் என் பழைய விவகாரங்கள் ஏறக்குறைய அடியோடு மறந்தே போயின." என்றான்.

வாட்ஸன்:—"நீ தொழிலைவிட்டு இளைப்பாறப் போய் விட்டாயென்றும், ஒரு சன்னியாசியைப்போல் உன் சிறு பூமியின் மத்தியில் தேனீ வளர்த்துக்கொண்டிருக்கிறு யென்றும் கேள்விப்பட்டோம்" என்றான்.

ஹோம்ஸ்:—"ஆம், உண்மையே. இவ்வளவு காலமாய் நான் சாத்திர ஆராய்ச்சியோடு செய்த வேலைகளின் பயனைப் பார்" என்று தான் போர்கிடமளித்த சிப்பத்திலிருந்த புத்தகத்தை யெடுத்து வாட்ஸனிடமளித்து "இதோ பார்! இதில் தேனீக்களை வளர்க்கும் முறைமை, அவற்றின் இயற்கை முதலிய யாவும்

இருக்கின்றன; அதுகாறும் கள்ளர்கள் முதலியவர்களைக் கவனித்துக்கொண் டிருந்தது போல் தேனீக் கூட்டங்களைக் கவனித்துக்கொண் டிருந்தேன்." என்றான்.

வாட்ஸன் :—"நீ எப்படி மறுபடி தொழிலில் பிரவேசித்தாய்?" என்றான்.

ஹோம்ஸ்:—ஹா! பன்முறை அதைப்பற்றி எனக்கு நானே வியப்போடு சிந்தித்துக் கொண்டேன். அன்னிய நாட்டு மந்திரி மட்டுமே வந்திருந்தால் நான் கவனித்திருக்க மாட்டேன். அம்மந்திரியோடு பிரதம மந்திரியும் சேர்ந்து என் சிறு குடிசைக்கு வருவதென்றால் விவகாரம் என்னவெனில், இதோஸோபாவில் சயனித்துக்கொண் டிருக்கிறாரே, இந்தப் பெரிய மனிதர் நமது நாட்டாருக்கு அளவு கடந்த அன்பைக் காட்டத் தொடங்கி விட்டார் (மிக்க கெடுதி செய்தார் என்று பொருள்). இவர் வரையில் ஒரு கூட்டமே. அனேக இராஜாங்க இரகசியங்கள் வெளிச் செல்லத் தொடங்கின. எப்படி என்று தெரியவில்லை. எப்படிப் போயின எங்குச் சென்றன என்று அறியக்கூடவில்லை. சில காரியஸ்தர்கள் மேல் சந்தேகம் தோன்றியது. சிலர் பிடிக்கவும் பட்டார்கள். விவகாரம் நின்றபாடில்லை. ஏனெனில் அவை யாவற்றுக்கும் மிக்க இரகசியமும் உறுதியுமான நடுமனை எங்கே யிருக்கிற தென்பதற்குப் போதுமான அத்தாட்சி யிருந்தது. அதைக் கண்டு பிடிக்கவேண்டியது அவசியமாக விருந்தது. நான் இதற்காக மிக வேண்டிக் கொள்ளப்பட்டேன்; பலவந்தம் செய்யப் பட்டேன்.

நான் இதிற் பிரவேசித்து இரண்டு வருடங்களாயின. இதற்கு இரண்டு வருட வேலை யவசியமாயிருந்தது. ஆனால்

இந்த இரண்டு வருடமும் மனத்துடிப் பில்லாமலில்லை. சுருக்கமாகக் கூறுகிறேன். அதனால் இதில் எத்தகைய கஷ்டமிருந்ததென்று உனக்கு விளங்கும். நான் அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகரத்திற்குச் சென்று அங்கு என் வேலையைத் தொடங்கினேன். மெதுவாய் மிகக் கஷ்டப்பட்டு பப்பலோ (Buffalo) நகரிலிருந்து அபர்லாந்து தேசத்தாரின் இரகசிய சங்கம் ஒன்றில் ஒரு அவயவியாகச் சேர்ந்து கொண்டேன். அங்குள்ள போலீஸ்காருக்கு மிக்க தொந்திரவு என்னாலுண்டாயிற்று. கடைசியில் வான் போர்குடைய காரியஸ்தன் ஒருவன் பார்வையில் சிக்கினேன். அவன் அங்கிருந்து வான் போர்குக்காக வேலை செய்துகொண் டிருந்தான். அவன் என்னை வான் போர்குக்குச் சிபாரிசு செய்தான்.

அதன் பிறகு இங்கு வந்து இவரிடம் அமர்ந்து வேலை செய்யத் தொடங்கினேன். அதன் பயனாய் இவருடைய முக்கியமான விவகாரங்கள் சில அடியோடு தவறிப் போயின. இவர் ஆட்களில் முதல் தரமான ஐந்து பேர் கூண்டில் போய்ச் சேர்ந்தார்கள்: நான் இவருடைய நம்பிக்கையைப் பெற்றதும் என்போல் இவரிடம் வேலை செய்யும் வேவு ஆட்கள் யாராரென்று தெரிந்துகொண்டு, சமயம் பார்த்துக்கொண்டிருந்து ஒவ்வொருவராகப் பிடித்துக் கொடுத்துவிட்டேன்" என்றான்.

அச்சமயம் வான்போர்க் மயக்கம் தெளிந்து கண் விழித்துப் பார்ப்பதைக் கண்டு "ஏனையா! ஒன்றும் கெடுதியில்லையே" என்றான். போர்க் சற்று நேரமாக விழித்துக் கொண்டு ஹோம்ஸ் கூறுவதை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தான். ஆல்டமான்ட் மிக்க நம்பகமான ஆள் என்று எண்ணிக்கொண்டு தாராளமாகப் பணம் கொடுத்துக்கொண்டிருந்த அவன், இப்போது ஆல்டமான்ட் தன்னிடம்

கொடுத்த உளவுகளெல்லாம் பொய் என்றும் அவன் தன்னை யடியோடு ஏமாற்றி விட்டதோடு தன் காரியங்களையே கெடுத்து விட்டானென்றும் உணர்ந்தால், அவன் மனம் என்ன வேதனையடையும். அவன் முகம் சிவந்து விட்டது. அவனுக்கு அடக்கமுடியாத கோபமும் வெறுப்பும் உண்டாகி ஜர்மென் பாஷையில் வாயில் வந்தபடி சபிக்கவும் திட்டவும் தொடங்கினான். ஹோம்ஸோ புன்னகையோடு அவன் பெட்டியிலிருந்த கடிதங்களை யொவ்வொன்றாகச் சோதித்துக்கொண்டிக்கிறான்.

வான்போர்க் திட்டித் திட்டி வாய் ஓய்ந்து ஆயாசத்தால் பேச்சை நிறுத்தியபோது, ஹோம்ஸ் "இந்த ஜர்மென் பாஷை செவிக்கினிமையாயிராவிடினும் வார்த்தைகள் தெளிவாயிருக்கின்றன" என்றான். அதற்குள் அக்கடிதங்களினின்றும் அகப்பட்ட ஒரு படத்தைப் பார்த்துவிட்டு "ஹோ ஹோ! இதென்ன? இது இன்னொருகிளியைக் கூண்டில் சேர்க்கும். சம்பளம் பங்கிட்டுக்கொடுக்கும் இந்த உத்தியோகஸ்தன் மேல் நான் கண்வைத்துக்கொண்டுதா னிருக்கிறேன். ஆயினும் அவன் இத்தகைய துரோகம் செய்வானென்று நான் கருதவில்லை. ஓ வான்போர்க்! நீ ஈடு சொல்வதற்கு அனேக விஷயங்களிருக்கிறன" என்றான்.

வான்போர்க் மிக்க சிரமத்தோடு மெதுவாய் நிமிர்ந்துட்கார்ந்து சொல்லொணு வியப்போடும் வெறுப்போடும் ஹோம்ஸை யுற்று நோக்கினான். கடைசியில்,

"ஆல்டமான்ட்! நான் உன்னைப் பார்த்துக்கொள்வேன். என் ஆயுள் முழுமையும் பிடிப்பதாயினும் சரி உன்னை விடமாட்டேன். பார்த்துக்கொள்வேன்" என்றான்.

ஹோம்ஸ் நகைத்துக்கொண்டே, "ஆ! நேர்த்தியான பழம்பாட்டு. என்னிடம் சிக்கிய உத்தமர்களில் அநேகர்

என்முன் இப்பாட்டைப்பாடி யிருக்கிருர்கள். காற்றுத் துப்பாக்கியால் சந்தடி செய்யாமல் கொலைசெய்த மோரி யார்டி என்பவனுக்கு இது மிக்க பிரியமான பாட்டு. இன் னும் பலர் இப்பாட்டைப்பாடுகிருர்கள். எல்லாப் பாட்டுகளை யும் கேட்டுக்கொண்டு நான் உயிரோடு இன்னும் இதோ இருந்து கொண்டுதா னிருக்கிறேன்" என்ருன்.

வான்போர்க் கொலைப்பார்வையோடும் கோபத்தோ டும், "அடே இரட்டைத்துரோகி (முதலில் உன் தாய் நாட் டிற்குத் துரோகம் செய்து எனக்கு உளவுகள் கொண்டுவந்து விற்ருய். இப்போது எனக்கும் துரோகம் செய்தாய்) நீ யழிந்துபோவாய்" என்ருன்.

ஹோம்ஸ்:—"இல்லை யில்லை. விவகாரம் அவ்வளவு கெட்ட தாயில்லை. என் வார்த்தைகளால் நீ யறிந்துகொண் டிருக்கலாமே. சிகாகோவிலிருந்த ஆல்டமான்ட் என் பவன் இம்மண்ணுலகிலில்லை. ஆகவே சௌகரியத்தின் படி அவன் பெயர் கொஞ்சகாலத்திற்கு நான் உப யோகப்படுத்திக்கொண்டேன். அவ்வளவே யுள்ள சமாசாரம்" என்ருன்.

இம்மொழிகளைக்கேட்ட வான் போர்க் மிக்க வியப்பும் கலவரமுமடைந்து, "அப்படியாயின் நீ யார்?" என்று கேட்டான்.

ஹோம்ஸ்:—உண்மையில் நான் யாரென்பது சுத்த அனுவ சியமே. ஆயினும் அதைப்பற்றியறிய உனக்கு விருப்ப மாக விருக்கிறவரையில் கூறுகிறேன். உண்மையின் உன் குடும்பத்தைச்சேர்ந்த ஆட்களுக்கு நான் அறிமுக மானது இது முதற்றடவையல்ல. முன்பு நான் ஜெர்மெனியில் வந்திருந்து அநேக வேலைகள் செய் திருக்கிறேன். பெரும்பாலும் என்பெயர் உனக்குத் தெரிந்ததாகவே யிருக்கும்.

வான்போர்க்:—"ஆயினும் அப்பெயரையறிய விரும்புகிறேன்" என்றான்.

ஹோம்ஸ்:—உனது சிறிய தந்தையின் புதல்வரான ஹென்ரீக் என்பவர் ஜர்மென் தூதாக இங்கு வந்திருந்த போது ஐரீன் ஆட்லர் என்ற மாதிடம் எப்படியோ சிக்கிக்கொண்ட பொஹீமியா அரசனை அவள் விலங்கினின்றும் மீட்டுவிட்டவன் நானே. கௌன்வான்கிராபென்ஸ்டீன் என்ற உனது அம்மானை அராஜகக் கொள்கையுடைய கிளாப்மன் என்றவன் கொல்ல விருந்த சமயம் அவரைக் காப்பாற்றியவனும் நான்றான். இன்னும் நான்றான்...." என்பதற்குள் வான்போர்க் அடக்கொணு வியப்பும் பீதியுமடைந்து,

"அய்யோ! அவை யெல்லாம் செய்தவனும் செய்யக் கூடியவனும் உலகில் ஒரே மனிதன்தா னிருக்கிறான். அவன்...." என்றதே,

ஹோம்ஸ்:—"ஆம் அதே ஷெர்லாக் ஹோம்ஸே நான்" என்றான்.

அதைக் கேட்டதே வான் போர்க் இடிப் பொடிந்தவன் போல் ஸோபாவில் அய்யோ கடவுளே யென்று சாய்ந்து விட்டு "அப்படியாயின்- உன் மூலமாக எனக்குக் கிடைத்த சமாசாரங்க ளெல்லாம்..." என்று அலறினன்.

ஹோம்ஸ்:—"ஆம் யாவும் பொய்தான்" என்றான்.

வான் போர்க் "அய்யோ தெய்வமே! நான் என்ன காரியம் செய்து விட்டேன். இனி என்றைக்கும் நான் அடியோடழிந்த மாதிரியே" என்று பிரலாபித்தான்.

ஹோம்ஸ்:—"ஆம் நான் கொடுத்த உளவுகளெல்லாம் நம்பத் தகாதவைகளே. நீ யவற்றைச் சோதனை செய்த பின் அனுப்பியிருக்க வேண்டும். உனக்குச் சோதனை செய்ய அவகாசமில்லை. என்ன செய்வது. சண்டை

நடக்கும்போது உமது கடற்படை சேனதிபதி நான் மெதுவாய்ச் செல்லும் என்ற கப்பல் அதிவேகமாய்ச் செல்கிறதென்றும், நான் சின்னது என்று கூறிய பீரங்கி மிகப் பெரியதாயிருக்கிற தென்றும், கால் மைல் தான் பாயும் என்ற குண்டு ஒன்றே கால் மைல் செல்கிறதென்றும், நான் ஜல மூழ்கிக் கப்பல் இரா தென்ற விடங்களில் அவை யிருக்கின்றன வென்றும், எங்கெங்கு கடற் சுரங்கம் இல்லை யென்றேனே அங் கெல்லாம் பலமான சுரங்கங்கள் போடப்பட்டிருந் தன வென்றும் அறிந்து உனது சாமார்த்தியத்தை மெச்சிப் புகழ்வார்" என்றான்.

தன் இருதயத்தில் ஈயத்தைக் காய்ச்சி வார்த்தது போலிருந்த இச்சங்கதிகளைக் கேட்ட வான் போர்க் தன் தொண்டையைத்தானே நெருக்கிக் கொண்டான். அதற் குள் ஹோம்ஸ் "இரு இரு, அவற்றோடு இன்னும் அனேக இரகசியங்கள் அந்தந்தச் சமயங்களில் வெளிவரும். ஜர்மானி யருக்குள் அரிதாகிய ஒரு விசேஷ குணம் உன்னிட மிருக் கிறது. அதாவது நீ ஒரு பிரசித்தி பெற்ற வேட்டையாள். எத்தனையோ பேரை யேமாற்றி விட்டிருக்கும் சாமார்த்திய வானாகிய நீயே கடைசியில் ஏமாந்து போய்விட்டாய். கடை சியில் உன்னாலான வரையில் உன் தாய் நாட்டிற்காகப் பாடுபட்டாய். என்னாலானவரை நானும் என் தாய் நாட்டிற்காகப் பாடுபட்டேன். இரண்டும் இயற்கையே. அதோடு ஒரு அற்ப மனிதனுக்குத் தோற்றுப் போவதே உண்மையில் அகௌரவம். இதில் உனக்கு அகௌரவம் ஒன்று மில்லை என்று போர்குடைய தோளைச் சாந்த மாகவே தட்டிவிட்டு, தன் நண்பனை நோக்கி,

"வாட்ஸன்! யாவும் ஆயத்தமாய்விட்டன. நமது நண்பரை வண்டிக்குக்கொண்டுபோக சற்று எனக்கு உதவி யாய் வா" என்றான்.

வான்போர்க் பலமும் துணிகாமுமுடைய மனிதன். ஆகையால் சற்று கஷ்டத்தோடேயே இருவரும் இருபுறங் களிலும் அவன் தோட்களைபபற்றியபடி மெதுவாய் அவ னைப் பிடித்துச்சென்று கட்டுகளோடேயே வண்டியில் ஏற்றி னார்கள். அவன் சேகரம் செய்துவைத்திருந்த பத்திரங்க ளெல்லாம் அவன் தோற்பையில் நிரப்பப்பட்டு அவன்கூட வண்டியில் வைக்கப்பட்டது. அதன்பின் ஹோம்ஸ் போர்க் பக்கத்திலுட்கார்ந்து கொண்டதும் வாட்ஸன் முன்னே யுட் கார்ந்து வண்டியை விட்டான்.

ஹோம்ஸ் போர்கை நோக்கி "சுருட்டு பிடிக்கப் பிரிய மாயின் ஒரு சுருட்டைப் பற்றவைத்து உன் வாயில் வைக் கத் தடையில்லை" என்றான்.

வான்போர்க்:—"ஹோம்ஸ்! உன்னுடைய நடக்கைகளுக்கு உனது இராஜாங்கமும் இடங் கொடுப்பதாயின் இது யுத்தத்தத்தை யுண்டாக்கத் தக்க வேலையாகும்" என்றான்.

ஹோம்ஸ் பக்கத்திலிருந்த தோற்பையைத் தட்டிக் காட்டி "உனது துரைத்தனமும் இதோ யிருக்கும் அதன் நடக்கைகளும் எப்படி யிருக்கின்றன?" என்றான்.

போர்க்:—"நீ யொரு சாதாரணமனிதன் என்னைச் சிறை செய்ய உன்னிடம் வாரன்டில்லை. உன் நடவடிக்கை கள் முழுமையும் அநீதமும் அக்கிரமுமானவை" என்றான்.

ஹோம்ஸ்:—முழுமையும்

போர்க்:—ஒரு ஜர்மென் குடியைக் களவாடிச் செல்லல்- அவனுடைய இரகசிய கடிதங்களைக் கைப்பற்றிக் கொள் ளுதல்-இப்போது நீயும் இதோ இருக்கும் உனது நண்

பரும் எத்தகைய நிலைமையிலிருக்கிறீர்களென்பது உனக்குத் தெரிந்தேயிருக்கிறது. நாம் இந்தக் கிராமத்தின் வழியே செல்லும்போது நான் ஒரு கூச்சலிட்டால் யாவரும் வந்து விடுவார்கள்...." என்றதே,

ஹோம்ஸ் மிக்க அவசரத்தோடு "ஓ பைத்தியக்கார மனிதனே! அத்தகைய முட்டாள்தனமான காரியத்தைச் செய்து விடாதே. செய்தையோ மறுமிடம் உன்னையே நீ நொந்துகொள்ள நேரிடும். எங்களால் உன்னைக் காப்பாற்ற முடியாமற்போம். இங்கிலீஷ்காரர்கள் சாதாரணமாய்ச் சாந்தமானவர்களே. ஆனால் அதற்கொரு எல்லையிருக்கிறது. இச்சமயம் ஜர்மானியாகிய நீங்கள் இங்கு செய்யும் காரியங்களைக் கேட்டு அவர்கள் கோபம் புகைந்துகொண்டிருக்கும் எரிமலைபோல், எச்சமயம் குபீலென்று தீக்கிளம்புமோ என்ற நிலையிலிருக்கிறது. தெரிகிறதா. பேசாமல் நாங்கள் கொண்டு போகும் இடத்திற்கு வா. அங்கு சேர்ந்தபின் உன் நெருங்கிய சிநேகரான வான் ஹெர்லிங்: மந்திரிமார் சபையில் உனக்களிப்பதாக வாக்களித்திருக்கும் பதவியைக் காலி செய்து உனக்காக இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறரா என்று கேட்டுப்பார்" என்றான்.

வான் போர்க் நோராய் இரகசிய சிறைச்சாலைக்குக் கொண்டு போகப்பட்டான். அங்கு அவன் பிரத்தியேகமான தனிக்காவலில் வைக்கப்பட்டான். அவனிடமிருந்தகப்பட்ட கடிதங்கள் யாவும் அதற்குத் தக்க அதிகாரிகள் வசத்தில் ஒப்பிவிக்கப்பட்டன. அதன் ஒரு மணி நேரத்திற்குள். ஹோம்ஸ் முன்பு கண்ட யுத்தக்கப்பலின் படத்தை வான் போர்குக்களித்த சம்பளம் பங்கிடும் உத்தியோகஸ்தன் சிறைசெய்யப்பட்டான். ஹோம்ஸுக்கு இராஜாக்கத்தார்

தக்க சன்மானம் செய்தார்கள். என்பதைப்பற்றி நாம் கூற வேண்டியது அனுவசியம்.

கல்லூர் சோமநாதன்—
சிவலிங்கம் கொலையின் மர்மம்.

1-வது அத்தியாயம்.

ஆனந்தஸிங் வாசம் செய்யும் வீட்டுக் காரியும் அவனுடைய காரியஸ்தியுமான அமிர்தம்மாள் மிக்க பொறுமைசாலி. ஆனந்தஸிங்குக்குச் சாதாரணமாய் எல்லாரும் வீடு விடமாட்டார்கள். ஏனெனில் அவன் வேலை நாழிகை யென்பதின்றி பகலிலும் இரவிலும் மனிதர் வந்துகொண்டும் போய்க்கொண்டு மிருப்பார்கள். நல்ல பெரியமனிதர், ஆடவர்ஸ்திரீகள் இருபாலாரிலும் - அயோக்கியர்கள், கள்ளர், கொலைபாதகர், போக்கிரிகள் யாரும் வருவார்கள். அதோடு ஆனந்தஸிங்கும் பகல் இரவென்றில்லாமல் அர்த்தராத்திரியில் விடியற்காலத்தில் எந்தவேளையிலும் மர்மமாய்ப் பலமாதிரி வேடங்களை யணிந்துகொண்டு வெளிச்செல்வான். அகாலத்தில் உள்ளே வருவான். ஒரு முறை யொருவருமறியா வண்ணமாகச் சாளரவழியாய் நூலேணியின் மூலமாய் வெளிச்செல்வான். இம்மாதிரி உண்மையறியாதவர்களுக்கு அவன் நடவடிக்கைகள் தாறுமாறாகவும். அவன் சகவாசம் தொல்லையாகவும் வெறுப்பாகவுமே புலப்படும். அவன் செய்யும் இரசாயன சோதனைகள் ஆபத்தானவை.

ஆனந்தபோதினி

(இனிய தமிழில் வெளிவரும் மாத சஞ்சிகை.)

இது, 20000 இருபதாயிரம் சந்தாதாரர்களை யுடையது; பன்னிரண்டு வருடங்கட்குமுன் தொடங்கி நடைபெற்று வருவது; டிம்மி 8-பக்க அளவில் 48-பக்கங்களுள்ளது. நாடோறும் மேலும் மேலும் புதிய சந்தாதாரர்கள் பலர் சேர்ந்து விருப்பத்துடன் ஆதரித்து வருவது. மனிதர் முக்கியமாக அடையத்தக்கனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் பெறுதற்குரிய மார்க்கங்களைத் தெளிவாக விளக்கிக்காட்டக்கூடியது; செந்தமிழை விருத்திசெய்யத்தக்கது; பெண்மக்கள், ஆடவர், மாணவர், மாணவிகள், பாலர், விருத்தர்முதலிய எல்லோருக்கும் அறிவை விளக்கி ஆனந்தத்தைத் தரவல்லது; வகுப்புபேதமின்றிப் பொதுவில் நின்று சகலர்க்கும் நீதி கூறுவது. எல்லாநாடுகளிலும் தமிழறிந்த சகலரிடத்தும் பரவிவருவது; கல்வியின் மிக்காராகிய பலரால் எழுதப்பெறும் பற்பல வியாசங்கள் நிரம்பப்பெற்று வருவது; தேசநலம், தருமமார்க்கம், கைத்தொழில், விவசாயம், வாணிபம், வைத்தியம், சோதிடம், தாய்மொழி முதலியவற்றின்சார்பாக அநேக வியாசங்களும், தேசபக்தர் முதலிய பெரியார் சரித்திரங்களும், வர்த்தமானங்களும், நாவல்களும், பஞ்சாங்கமும் இதில் மாதந்தோறும் வெளிவரும்; ஆனந்தமூட்டும் விநோதவிஷயங்களும் நிறைந்துள்ளன. தமிழ் நாட்டில் அதிகரித்த சந்தாதாரர்களையுடையதும், நெடுங்காலமாக நிலைபெற்று நடந்துவருவதும், குறைந்த சந்தாத்தொகையுள்ளதுமான மாதசஞ்சிகை இஃதொன்றே. தமிழ்மக்கள் ஒவ்வொருவருக்கும் இது மிக அவசியமானது. ஆதலின், நண்பர்களே! இதற்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள். முன்பண மனுப்பியாவது வி. பி-யிலாவது இப்பத்திரிகை பெற்றுக்கொள்ளலாம். இதன் வருட ஆரம்பம் ஒவ்வொருவருடத்திலும் ஆடிமீ ஆதலால் எந்தமாதத்தில் ஒருவர் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவர்க்கு ஆடிமீ முதலே ஒரு வருடப் பத்திரிகை அனுப்பப்படும். மாதிரிக்காப்பி இனமாக அனுப்பப்படும்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு

1-வருஷ சந்தா ரூபா 1—0—0

பினங், சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0

வி. பி. யில்லாத நாடுகளிலுள்ளவர்கள் முன்பண மனுப்பவேண்டும்.

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras.